சித்தாந்தம்

தொகுதி 9. பகுதி 5, 6, 7, 8

May - Aug 1920.

SL
R673:M24,N
M20.9.5-8.
182115

Registered No. M. 980.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

3 MAR 1921 MADRAS

# சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் மாதாந்தத்

தமிழ்ப் பத்திரிகை.

"முத்தாந்த விதி முளரிதொழு மன்பருக்கே

சித்தாந்த விதிவருந் தேவே பராபரமே"—தாயுமானவர்

| | | |
|---|---|---|
| தொகுதி ௩. | 1920ஆ மே, ஜூன், | பகுதி ௫, ௬, |
| | ,, ஜூலை, ஆகஸ்டுமீ | ,, ௭, ௮. |

உள்ளுறை.

| | | | |
|---|---|---|---|
| திருப்பாசுர விளக்கம் | ... | பத்திராதிபர் | 31 |
| திருவாரூர் நான்மணிமாலை யுரை | ... | ,, | 34 |
| சமயம் | ... | ஞானாமிர்தம் | 40 |
| வேதசிவாகமங்கள் | ... | ச. சபாரத்தின முதலியார் | 47 |
| சிவப்பிரகாச வியாக்கியானம் | ... | ,, | 51 |
| மதிப்புரை | ... | சே. வெ. ஜம்புலிங்கம் | 60 |

பத்திராதிபர் :

கி. குப்புசாமி முதலியார்

சென்னை

செங்கல்வராய நாயகர் ஆர்பனேஜ் அச்சுக்கூடம்.

வருடச்சந்தா ரூ 1-4-0.] 1920. [தபாற்கூலி அணா 4.

"சித்தாந்தம்" ஆபீஸ், திருவண்ணாமலைமடம், மேற்குமாடவீதி, மயிலா…

# சமாஜக் காரியஸ்தானம்.

இச்சமாஜக் காரியஸ்தானம் இப்போது திருமயிலைத் தெற்கு மாடவீதியிலுள்ள திருவண்ணாமலை மடத்திற்கு மாற்றப்பட்டது. கடிதங்கள் முதலியன அங்ஙனமே விலாசமிடப்படவேண்டியது.

# சைவசித்தாந்த மகாசமாஜப் பெருங்கூட்டம்.

இச்சமாஜத்தின் 15-வது வருடோத்சவம் திருமயிலாடுதுறையாகிய மாயவரத்தின்கண் அடுத்த டிசம்பர்மீ கொண்டாடப்பெறும். தேதி, இடம் முதலிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இங்ஙனம்,
கா. சுப்பிரமணியம்,
காரியதரிசி.

உ

திருச்சிற்றம்பலம்

மகா விஞ்ஞாபனம்

## "சிவஞானபோதமாபாடியம்"

முழுதும் பரிசோதித்து அச்சிட ஆரம்பிக்கின்றேன். விலைக்கு வாங்கவிரும்பும் அன்பர்கள் தங்கள் கையெழுத்தை மாத்திரம் எனக்கு அனுப்புமாறு வேண்டுகின்றேன்.

[illegible] முத்தையா
முதலித் தெரு, சென்னை.

இங்ஙனம்,
சுவாமிநாத பண்டிதர்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# மாமகசைவசித்தாந்தமகாசமாசம்

## அன்னதானமும் பிரசங்கமும்.

MAR 1932

### திருஞானசம்பந்தசுவாமிகள்

### தேவாரம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

### திருநாவுக்கரசுசுவாமிகள்

### தேவாரம்.

எலியிடர்க் கடலிடைப்பட் டிளைக்கின் றேனை
யிப்பிறவி யறுத்தேற வாங்கி யாங்கே
கூவியம ருலகனைத்து முருவிப் போகக்
குறியிலறு குணத்தாண்டு கொண்டார் போலுந்
தாவிமுதற் காவிரிநல் யமுனை கங்கை
சரசுவதிபொற் றாமரைபுட் கரணி தெண்ணீர்க்
கோவியொடு குமரிவரு தீர்த்தஞ் சூழ்ந்த
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே.

### திருவிளையாடற்புராணம்.

சாமகண் டத்தன் றன்னைத் தானருச் சித்த தென்னர்
கோமகன் பிரம சாயை குறைத்ததிப் பதியாங் கங்கை
மாமகந் தோறும் வந்து வந்துதற் படிந்தோர் விட்டுப்
போமகம் போக மூழ்கும் புனிதநீர்ப் பதியைக் காண்மின்.

எனத் திருநாவுக்கரசுசுவாமிகளும் பரஞ்சோதிமாமுனிவரும் முறையே தேவாரத்தும் திருவிளையாடற் புராணத்தும் திருவாய்மலர்ந்தருளிய வண்ணமே, காவிரி முதலிய புண்ணிய தீர்த்தங்களாற் சூழப்பட்டதும், பன்னிராண்டிற் கொருமுறை மாமக நட்சத்திரங்கூடிய மங்கல தினத்திலே கங்காநதி மூழ்கப்பெற்று, அம்மாமகதினத்திலும் மற்றையதினங்களிலும் தன்னிடத்து ஸ்நானஞ் செய்வோர் பாவங்கள் எல்லாவற்றையும் போக்கி அப்பாவங்கள் தன்னைச் சாரப்பெறாத தகைமை வாய்ந்த மாமாங்கக்குளம் என

வழங்கும் **மாமகதீர்த்தம்** என்னும் மகாபுண்ணிய தீர்த்தத்தை யுடையதும், ஆன்மாக்கள் தம்மை வழிபட்டு உய்யும் வண்ணம் ஸ்ரீ கும்பேசுரர் ஸ்ரீ மங்களாம்பிகை சமேதராய்க் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கப் பெற்றதுமாகிய **கும்பகோணம்** என்னும் திவ்விய க்ஷேத்திரத்திலே, நாளது ரௌத்திரி ௵ மாசி௴ 11௳ (22-2-1921) செவ்வாய்க்கிழமை, பன்னிரு வருடத்திற்கொருமுறை வரும் மாமக மங்கலவாரமாதலால், பற்பல தேசங்களினின்று மாமக ஸ்நானத்தின்பொருட்டுப் பல்லாயிரம் பத்திமான்கள் அங்கே வந்து கூடுவார்கள் என்பது யாவரும் அநுபவத்தினால் அறிந்ததொன்றாம். அக்காலத்து அப்பத்திமான்கட்கு அன்னமளித்து உபசரித்தல் புண்ணியங்களுள் மிக்க புண்ணியமென்பது நூற்றுணிபு.

இக்கருத்தினாலன்றோ, திருஞான சம்பந்த சுவாமிகள் திருமயிலாப்பூரில் பூம்பாவையின் என்பைப் பெண்ணாக்குதற்குத் திருவாய்மலர்ந்தருளிய திருப்பதிகத்தின் முதலிலே, பூம்பாவையை முன்னிலைப்படுத்தி, சிவனடியார்களுக்குச் சமைத்துக் கொடுத்து அவர்கள் உண்டு மகிழக் கண்டுகளியாது வாளா இறந்துபோகின்றனையோ, அவ்வண்ணம் போகாது உயிர்பெற்று வந்து அப்புண்ணியத்தைச் செய்து மகிழ்வாயாக என்னும் பொருளமைத்து,

மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.

என்னுந் திருப்பாடலைப் பாடியருளினர்.

**சேக்கிழார்நாயனார்** இத்திருப்பாட்டின் பொருள் யாவர்க்கும் இனிது விளங்குமாறு,

மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லாரடி யார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணி னாலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனி னுலகர்முன் வருகென வுரைப்பார்.

என்று பெரிய புராணத்துட் கூறியருளினார்.

இன்னும் இவ்வுண்மையை,

அதிக நல்லற நிற்பதென் றெண்ணினை யறத்துள்
அதிக மாஞ்சிவ புண்ணியஞ் சிவார்ச்சனை யவற்றுள்
அதிக மாஞ்சிவ பூசையு ளடியவர் பூசை
அதிக மொன்றறிந் தன்பரை யருச்சனை செய்வாய்.

எனச் சிவபிரான் திருவாய்மலர்ந்தருளிய பொருளையுடைய திருவிளையாடற்புராணச் செய்யுளானும் நன்கறிக.



இன்னும் பெரியபுராணத்துட் கூறப்பட்ட அறுபத்துமூன்று தனியடியார்களுள் பெரும்பாலார் அடியவர்க் கன்னமளித்தலாகிய புண்ணியத்தையே மேற்கொண்டு முத்தியடைந்தனர் என்பதை அவர்கள் புராணங்களுட்காண்க.

இனிச் சாதிசமயங்களைக் குறியாது அன்னம் அகப்படாத காலத்து யாவர்க்கும் அன்னமிடுதலும் பெரும் புண்ணியம் என்பது எல்லாச் சமய நூல்கட்கும் ஒத்த கருத்தாம் என்பதை அவ்வச்சமய நூல்களுட் காண்க. விரிப்பிற் பெருகும்.

எல்லாச் சமயத்துக்கும் பொதுவாயும், சைவசமயத்திற்குப் பொதுவுஞ் சிறப்புமாயு மிருக்கின்ற அரும்பெரும் புண்ணியமாகிய அன்னதானமும், இம்மை, மறுமை, வீடு என்னும் மும்மைப் பயன்களையுங் கொடுத்தற்கேதுவாய் மகாவித்துவான்கள் செய்யும் அரும்பெரும் பிரசங்கங்களும் கனதனவான்களால் **மாமகந்தோறும்** கும்பகோணத்தில் நடைபெறல் வேண்டும் என்னும் கருத்தை மேற்கொண்ட சிவ - திரு: **சுவாமிநாதபண்டிதரவர்கள்** இந்தவருடம் மாசி௴ வருகிற மாமகத்தில் அவற்றை ஆரம்பித்தல்வேண்டும் என்று எம்மிடம் தெரிவித்தார்கள். யாங்கள் அதற்கு உடன்பட்டு, அப்பண்டிதரவர்களையே அக்கிராசனாதிபதியாகக்கொண்டு "அன்னதான சமாசம்" என்னும் பெயரையுடைய ஒரு சமாசத்தைக்கூட்டிச் செயற்பாலனவற்றை யோசித்து முடிவுசெய்து கொண்டு, நாமே முதலிற் கைச்சாத்திட்டோம். அப்பொழுது சற்று ஏறக்குறைய நானூறு கலன் நெல்லுச் சேர்ந்துவிட்டது. அது எமது ஊராகிய **பெருந்தோட்டத்திலே** சேராகக்கட்டிவைக்கப்பட்டது. *கருவாழைக்கரையில் எழுபத்திரண்டு கலன் நெல்லுச் சேர்ந்தது. அது அங்கே சேராகக்கட்டிவைக்கப்பட்டது. அன்னதான சமாசத்தாரும் சமாச அக்கிராசனாதிபதியவர்களும் ஆகிய யாமெல்லாம் ரூபா 25,000 சேர்த்தற்காக மேன்மேலும் முயற்சி செய்கின்றோம்.

இஃதிங்ஙனம் நிகழ, இக்காலந் திரிசிரபுரத்துவாசராகிய ஸ்ரீமாந் †**செல்லப்பமுதலியாரவர்களும்** அவர்கள் மைத்துனர் ஸ்ரீமாந். **வெல்லப்பமுதலியாரவர்களும்** இவ்வுத்தமோத்தம தருமங்களைக் கேள்விப்பட்டவுடனே பிறர் தூண்டாமலே, பொருளினாலும் மனவாக்குக் காயங்களினாலும் வேண்டிய உதவிசெய்வேம் என்று அக்கிராசனாதிபதியவர்களுக்குக் கடித

*இவ்வூரில் ஸ்ரீமாந். சூரிச்செட்டியாரவர்கள்செய்த முயற்சி வியக்கற்பாலது.

† இம்மெய்யன்பர், தென்னிந்தியா ரயில்வே டிக்கெட் பிரிண்டிங் ஆபீஸ் சூபரின்டென்டெண்டு உத்தியோகஸ்தர், திருச்சிச் சைவசித்தாந்த சபைக் காரியதரிசியார், சைவப்பிரசாரகர், சிவபத்த சிரேட்டர், உடையவர் பூசாதுரந்தரர், அடியார்க்குமடியார்க்கும் அன்னமளிப்பவர், சைவசமயாபிமானர். இவர்,

18)115

மூலம் தெரிவித்து முந்தி நிற்கின்றார்கள். இவர்களைப்போல ஏனைய கனதனவான்களாகிய பெரியார் தாமும் புண்ணியம் புகழ்களைப் பெரிதாங் கைக்கொள்ள முந்துறுவார்களாயின் இவ்வுத்தமோத்தம தருமங்கள் இலகுவாக நிறைவேறும். ஆகலான் அப்பெரியார் அவற்றின்பொருட்டு எம்மால் வேண்டிக் கொள்ளப்படுகின்றார்கள். சிவபிரான் அவர்க்குத் திருவருள் புரிவாராக.

இங்ஙனம்.

| | |
|---|---|
| ‡ அட்சயலிங்கபிள்ளை | மூ. அகோரம்பிள்ளை |
| அ. பொன்னம்பலபிள்ளை | வ.க. அகோரம்பிள்ளை |
| வி. சண்முகத்தாபிள்ளை | சி. குஞ்சிதபாதபிள்ளை |
| சீ. முத்துப்பிள்ளை | சு. செல்லம்பிள்ளை |
| வை. சாமிநாதபிள்ளை | க. திருநாவுக்கரசுப்பிள்ளை |
| K.S. சோமசுந்தரம்பிள்ளை | தி. குமாரசாமிப்பிள்ளை |
| வெ. முருகேசபிள்ளை | வே. பரஞ்சோதிப்பிள்ளை |
| V.M. முத்தையபிள்ளை | R. திருநாவுக்கரசுப்பிள்ளை |
| து. சுப்பையாப்பிள்ளை | ச. பாலசுப்பிரமணியபிள்ளை |
| த.து. நடேசபிள்ளை | மு. கந்தசாமிப்பிள்ளை |

பெருந்தோட்டம்.

---

என்னானு மோருதவி யாதொருவன் யார்க்கெனினும்
தன்னான் முடிவதெனிற் றானே முடித்தறலை
சொன்னான் முடித்த லிடையாகுஞ் சொல்லுகினும்
பன்னாண் மறுத்துப் புரிதல்கடைப் பான்மையதே.

என்றுங் கந்தபுராணச் செய்யுளை ஞாபகப்படுத்துகின்றார்.

‡ இப்பெயர்கள் கையெழுத்துப்படி அச்சிடப்பட்டன.

இத்தருமங்களுக்குப் பொருள் முதலியவற்றால் உதவிகள் செய்வோரது ஊரும், பேரும், தொகையும் பின்னர் அச்சிட்டு [illegible] வெளிப்படுத்தப்படும்.

இத்தருமங்கள் நடைபெறுங் கிரமங்களையும், பிறவற்றையும் அறியவிரும்புவோர், அன்னதானசமாசக் காரியதரிசிக்குக் கடிதமனுப்பி அறிந்துகொள்ளலாம். பணம் அனுப்புவோருக்கு அவர் ரசீது அனுப்புவார்.

விலாசம்:—ம-௱-௱-ஸ்ரீ அ. முருகேசபிள்ளையவர்கள்,
அன்னதானசமாசக் காரியதரிசி,
பெருந்தோட்டம், திருவெண்காட்டுப்போஸ்டு,
சீர்காழிமார்க்கம்.

P. R. RAMA IYAR AND CO., PRINTERS, MADRAS

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்


| | | |
|---|---|---|
| தொகுதி ௩. | 1920ஸு மே, ஜூன், ,, ஜூலை, ஆகஸ்டுமீ | பகுதி ௫, ௬, ௭, ௮. |


## திருப்பாசுர விளக்கம்

'கற்றவர்விழுங்கும் கற்பகக்கனியைக் கரையிலாக் கருணைமாகடலை
மற்றவரறியா மாணிக்கமலையை மதிப்பவர் மனமணிவிளக்கைச்
செற்றவர்புரங்கள் செற்றவெஞ்சிவனைத் திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன்றன்னைக் கண்டு கண்டுள்ளங் குளிரவென்கண்
குளிர்ந்தனவே.

9-ம் திருமுறை—சேந்தனாருளிய திருவிசைப்பா.

(இ-ள்.) கற்றவர்விழுங்கும்-நூல்களைக் கற்றவர்களால் விழுங்கப்படும், கற்பகக்கனியை-கற்பகவிருக்ஷத்தின் கனிபோல்வானை, கரை இலா கருணைமாகடலை-அளவுபடாத கருணையாகிய மகா சமுத்திரத்தை, மற்றவர் அறியா-அடியவர்கள் அல்லாதவர்கள் அறியக்கூடாத, மாணிக்கமலையை-மாணிக்கமலைபோல்வானை, மதிப்பவர் மனமணிவிளக்கை-உண்மை யிதுவென மதித்தவர் மனத்தின் கண்ணே பிரகாசிக்கும் மாணிக்கத்தீபம் போல்வானை, செற்றவர் புரங்கள் செற்ற-தம்மை மதியாதவர்களது வலிய அரண்களாகிய திரிபுரத்தை எரித்த, என்சிவனை-என்னையடிமையாகக் கொண்ட என் சிவபெருமானை, திருவீழிமிழலை-திருவீழிமிழலை என்னும்

திருத்தலத்தின்கண், வீற்றிருந்த-எழுந்தருளியிருந்த, கொற்றவன் தன்னை அரசனை, கண்டு-கண்டு தரிசித்து தரிசித்து, உள்ளங்குளிர என் மனமானது குளிர, என்கண் குளிர்ந்தனவே - என் கண்கள் ஆனந்தித்தன.

இனி 'கற்றவர்' என்றமையால் கற்றற்குரிய நூல்களாகிய அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப்பொருள்களை உணர்ந்தோர் என்றதாம். அது வென்னையோவெனின் இவ்வுறுதிப்பொருள் உணர்த்துவனவாகிய நூல்களன்றி-பிற பொருள் உணர்த்துவனவாகிய நூல்களை கற்கப்புகின் சின்னாள் பல்பிணிச் சிற்றறிவினர்க்கு எடுத்த-யாக்கையின்பயனை அடையமுடியாது இழந்துபோதற்கே காரணம் ஆகும். ஆதலால் நல்லோர் பலருடனும் பலகாலும் பயின்று விபரீதஐயங்கள் நீங்கிச் "சூழும் உட்படாப்போகமும் துவ்வாத்தருமமும் தங்கார்க்கேசெய்து" என்றபடி இல்வாழ்வானாய் நின்றவிடத்து அன்புடையானாய் விருந்து ஓம்பி நற்றறந்தழுவி ஒப்புரவறிந்து ஈகையில் சிறந்து புகழுடையானாய்ப் பிறகு பிறப்பின் துன்பத்தை யுணர்ந்து இல்லறத்திற்குரியதாகிய பொருள் தேடுதலும் இன்பந்துய்த்தலும் விட்டொழிந்து அருளுடையராய்ப் புலால்மறுத்து தவம்பேணி உவந்தாரையாக்கி ஒன்னாரைப்போக்கி யின்னாசெய்யாது கொலைநீத்து நிலையாமை யுணர்ந்து துறவுபூண்டு மெய்யுணர்வுற்று அவாவறுத்தவரே கற்றவரெனப் போந்தபொருளாயிற்று. இவ்வாறு கல்வியைக் கற்றாராயினும் அக்கல்வியைக் கற்றதனாலாகிய பயன் வாலறிவனாய் இறைமைக் குணங்களெல்லாம் உடையவனாய் தனக்குவமையில்லானாய் அறவாழியந்தணனாய் எண்குணத்தனாய் உள்ள இறைவனடியே எக்காலத்தும் பிறவிப்பெருங்கடலை நீந்த எண்ணுபவரே கற்றவர் ஆவர். இத்தகைய கற்றோர் விழுங்கும் கற்பகக்கனியை என்றமையால் உள்நின்ற இறைவன் குருவாக வெளிவந்து உணர்த்திய உணர்த்தலை எக்காலத்தும் எண்ணி நின்றவராதலால் அவர் எண்ணி நின்ற ஐந்தெழுத்தும் தண்ணிழலாகி எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் ஓர் சிறிதும் தெவிட்டாதகனி எனவறிந்தோம்.

இனி 'கருணைமாகடலை' என்றமையால் மற்றைக் கடல்கள் போலல்லாது தன்னிடமடைந்தாரை முத்தியென்னுங் கரையில் சேர்ப்பிப்பதும் அவ்வவ்வுயிரது வினைக்கு ஏற்ப பேறு இழவு இன்பம் பிணி மூப்பு சாக்காடு என்னும் ஆறும் தந்து காத்து அளிக்கும் கடல் என உணர்ந்தோம். பொய்மாயப் பிறவிப்பெருங் கடலினின்றும் நீக்கப்பட்டது. "கடல் சிவம் நீரான்மா."



'மற்றவர் அறியாமாணிக்கமலையை' என்றமையால் இருவினையொப்பு மலபரிபாகம் சத்தி நிபாதம் ஆகிய இவை பெறுதார் கல்லாராதலால், கல்லார் கண்கள் குருட்டுக்கண்கள் ஆகையால் உயிர்கள்தோறும் ஒளித்துநிற்குங் கள்வனாயினும் அவர்கள் தெரிந்து கொள்வதற்கு முடியாததாகும் என்று உணர்ந்தாம்.

இனி 'மதிப்பவர் மனமணி விளக்கை' என்றமையால் உயிர் என்னும் பாத்திரத்தில் உணர்வு என்னும் நீர்ப்பாய்ச்சி வளர்க்கின்ற பெரியோர்க்கு ஒளிபூத்து அருள்பழுத்த மலர்க்கற்பகம் ஆதலுடன் அகந்தைக்கிழங்கை அகழ்ந்து எடுப்போராகிய அவர்க்கு அவனை யெக்காலத்தும் தரிசிப்பதற்கு உள்ளக்கோயிலில் ஏற்றும் விளக்காக நிற்கின்றான் என்று உணர்ந்தாம்.

'செற்றவர் புரங்கள்செற்ற எம்சிவனை' என்றமையால் ஆசை நீத்தார்க்கு இடையூறு செய்யும் மும்மலங்களாகிய ஆணவம் கன்மம் மாயையாகிய மூன்றையும் போக்கினான் என்பது பெற்றாம்.

'திருவீழிமிழலை வீற்றிருந்த' என்றமையால் மூன்று திருமேனிகளையும் தமக்கு இச்சைத் திருமேனிகளாகக்கொண்ட இறைவன் ஆன்மாக்கள் உய்யும் வண்ணம் நிலவுலகத்தின்கண் அருவுருவத் திருமேனி கொண்டு எழுந்தருளினன் என்பது பெற்றாம்.

இனி 'கொற்றவன்' என்றமையால் வெண்கொற்றக் குடையும் நவமணிமுடியும் சிங்காதனமும் மன்னவர்க்கே உரிய சிறப்பு அடையாளம்போன்று பிரபஞ்சம் எல்லாவற்றிற்கும் மூலகாரணமாகிய ஒரு பெருவெண் கொற்றக்குடையும் எவற்றையும் ஒருங்கே ஓரியல்பானறியும் பேரறிவாகிய ஒரு பெருஞ்சுடர் முடியும் எவற்றினையும் அங்கங்கே உயிர்க்கு உயிராய்நின்று செலுத்தும் இயல்பாகிய ஒரு பெருஞ்சிங்காதனமும் மற்றைக் கடவுளர்க்கு இன்றி தனக்கே உரிமையாகக் கொண்ட சிறப்புடைமையைப் பெற்றாம்.

'கண்டு கண்டு' என்றமையால் ஆன்மதரிசனமும் ஆன்மசுத்தியும் ஆன்மலாபமும் என்பது பெற்றாம்.

'உள்ளங்குளிர என் கண் குளிர்ந்தனவே' என்றமையால் இறைவன் திருவடியைச் சேரவொட்டாத ஆணவமலத்தைக் கழுவி அன்பரொடுசேர்ந்து அவ்வடியவர்வேடத்தையும் ஆலயத்தையும் அரன் எனத்தொழுதல் என்பது பெற்றாம்.

பத்திராதிபர்.

---

உ

# திருவாரூர் நான்மணிமாலையுரை

(தொகுதி ௬-பகுதி—௰, 8-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

நேரிசை வெண்பா.

இன்னீருலகத்துக் கின்னுயிர் யாமென் றுணர்த்து
நன்னீர் வயற்கமலை நாதனார்—பொன்னார்ந்த
சேவடிக்காளானார் சிலரன்றே தென்புலத்தார்
கோவடிக் காளாகார் குலைந்து.

(இ - ள்.) இனிமை-இனிமை தங்கிய, நீர்-கடலாற் சூழப்பட்ட, உலகத்துக்கு-நில உலகத்திற்கு, இன்னுயிர்-இனிமையைத் தரும் உயிர், யாம்-நாம், என்று உணர்த்தும்-என்று ஆன்மாக்களுக்கு அறிவிக்கும், நல்நீர்-நல்ல நீர்வளந்தங்கிய, வயல்-வயல்களால் சூழப்பெற்ற, கமலைநாதனார்-திருவாரூரில் எழுந்தருளிய தலைவரது, பொன் ஆர்ந்த-பொன்போன்ற, சேவடிக்கு சிவந்ததிருவடிகளுக்கு, ஆளானார் அடிமைப்பட்டவர்கள், தென்புலத்தார்கோ-யமனது, அடிக்கு-அடிகளுக்கு, குலைந்து சீர்கெட்டு, ஆளாகார்-ஆளாகாதவராகிய, சிலரன்றே-சிலரே யல்லவா?

உயிர்க்குயிராய் ஆன்மாக்கள்தோறும் நிறைந்து நின்று, அவ்வான்மாக்களுக்கு நல்வினைக்கீடாக இனிமையை யுணர்த்தும் இறைவன் உளனாதலால் "இன்னீருலகத்துக் கின்னுயிர்யா மென்றுணர்த்தும்" என்றனர். 'பொன்னார் மேனியனே' என்றும், 'பொன்பூத்த மேனியினீர்' என்றும் 'பொன்னார் திருவடிக்கொன்றுண்டு விண்



ணப்பம்' என்றும் ஆன்றோர் அருளியவண்ணமே ஈண்டும் பொன்னார்ந்த சேவடியென்றனர்.

ஆன்மாக்கள் முன்செய் தவத்தால், இறைவனே ஆசாரியனாக எழுந்தருளி பிறப்பு, பிணி, மூப்பு, இறப்பு என்பவற்றின் துன்பங்களை யறிவித்து வீட்டினின்பத்தை யுணர்த்தினாலன்றி, நன்னெறிப்பட்டு பாசம் நீர்ந்து ஐந்தெழுத்தோதி, அவன்பணி நின்று அவன் கழல் சேருதலில்லை யாதலால் 'சேவடிக்கு ஆளானார் சிலரன்றே' என்றார்.

இறைவன் ஓதிய வீட்டு நெறியை யிகழ்ந்து தீநெறிச்சென்றார் தென்றிசைத் தலைவனால் தண்டிக்கப்படுதல் ஒருதலை யென்பார் 'தென்புலத்தார் கோவடிக்குக் குலைந்து ஆளாகார்' என்றனர்.

கட்டளைக் கலித்துறை.

குலைவைத்த செவ்விளநீர் குளிர்பூம் பொழிற்கொம்புக்கின்ப
முலைவைத்ததொக்குங் கமலேசர் வேணிமுகிழ் நகைவெண்
டலைவைத்த வேனற்புனமொக்குங் கங்கையத் தண்புனத்தி
னிலைவைத்த மாதரையொக்குங் கவணொக்கு நீள்பிறையே.

(இ - ள்.) கமலேசர்-வீதிவிடங்கப் பெருமானுடைய, பூபொழில்-அழகிய சோலையாகிய, கொம்புக்கு-பெண்ணுக்கு, குலைவைத்த செவ்விளநீர்-செவ்விளநீர்களைப் பொருந்திய குலைகள், இன்பமுலை வைத்ததொக்கும்-இன்பத்தைத் தருகின்ற முலையினை வைத்ததை யொத்திருப்பன, நகைவெண் தலைவைத்த வேணி—விளங்குகின்ற வெண்மையாகிய தலையோட்டினைப்பெற்ற சடை, முகிழ் ஏனற்புனம் ஒக்கும்-முல்லை யரும்புகள் தங்கியிருக்கின்ற ஏனற்புனத்தை யொத்திருக்கும், கங்கை-கங்கையானது, அத்தண்புனத்தின் நிலைவைத்த-அக்குளிர்ந்த நிலத்தில் நிலைத்திருக்கின்ற, மாதர் ஒக்கும் தோழிப்பெண்களை ஒக்கும், நீள்பிறை நீண்ட பிறையானது, கவண் ஒக்கும்-அப்பெண்கள் கையிற்கொண்டு புட்களையோட்டும் கவண் கல்லை ஒக்கும்.

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

பிறையொழுக வொழுகுபுனற் கங்கையாற்றின் பேரலையிற்
றெடுத்துவிட்ட பெரும்பாம்பென்னக்
கறையொழுகும் படவரவம் படரும்வேணிக் கண்ணுதலார்
கமலையிற் பைங்கமலைபோல் வீர்

நறையொழுகு மலர்ப்பொழில் குத்தகையாத் தந்தீர் நானிரண்டு
மாவடுவு நாடிக்காணே
நிறையொழுகு மிளநீரு நிற்கக்காணே னீர்செய்த காரியமென்
னிகழ்த்துவேனே.

(இ-ள்.) பிறைபொழுக-சந்திரிகை விளங்க, புனல் ஒழுகு-நீரோடுகின்ற, கங்கையாற்றின்-கங்காநதியின், போலாயில் பெரிய வலையினிடத்தே, தொடுத்துவிட்ட தொடுத்துத் தொங்கவிட்ட, பெரும்பாம்பு என்ன-பெரிய பாம்பு என்று சொல்லும்படி, கறையொழுகும்-கறையோடுகூடிய, பட அரவம்-படத்தையுடைய பாம்பானது, படரும்-தவழும், வேணி-சடாபாரத்தையுடைய, கண்ணுதலார்-நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானார், கமலையில் திருவாரூரில், கமலைபோல்வீர்-இலக்குமியை யொத்த பெண்காள்! நறையொழுகும்-தேனானது ஒழுகின்ற, மலர்ப்பொழில்-பூஞ்சோலையினை, குத்தகையாத்தந்தீர்-நிலையாகமதித்துக் கொடுத்தீர், நான்-யான் இரண்டுமாவடுவு-இரண்டுமாவின் வடுவினை, நாடி-தேடி, கணேன்-காணவில்லை, (அன்றியும்) நிறையொழுகு-பாரமுள்ள, இளநீரும் இளநீர்களையும், நிற்க-இருக்க, காணேன்-காணவில்லை, நீர்செய்த காரியம்-நீர்செய்த செய்கையை, என்-யாதென்று, நிகழ்த்துவேன்-சொல்லுவேன். (ஏ-அசை.)

பெருமான் காருண்ணிய மிகுதியால் பகீரதன்பொருட்டு கங்கையைத்தாங்கினரென்பது போதர "பிறைபொழுக வொழுகுபுனற் கங்கை" என்றும், தாருகவனத்து ரிஷிகள் விட்ட பாம்பானது அவருக்கு யாதொரு இடையூறும் செய்வது இல்லை என்பது போதர 'கறைபொழுகு படவரவம் படரும் வேணி, என்றும் சேர்ந்தார்க்கு எல்லா நலனும் உண்டாகச்செய்பவன் என்பது போதர (கண்ணுதலார் கமலையிற் பைங்க மலைபோல்வீர்) என்றும் விதந்து ஓதினர்.

### நேரிசை யாசிரியப்பா

வேனிலானுருப்பின் மென்றசை யிறைச்சி
தீ நாக்கறியத் திருக்கண்டிறந்தோய்!
நான்மறை முனிவன்கான் முனைநிற்ப
விடற்கரும்பாசத் தொடுடற் பொறைநீங்க



உயிருண் கூற்றுக்குத் திருவடிவைத் தோய்
கருங்கடல் வண்ணன் வெள் விடையாகி
யடிகடாங்கிய உதவிக் காங்கவன்
முழுவென்பு சுமந்த கழுமுட் படையோய்
தேவாசிரயன் றிருக்காவணத்து
மேவாநின்ற விண்ணவர் குழாங்க
ளுருத்திரகணங்க ளென்றோடினர் வணங்கி
யருக்கியமுதல வகனமர்ந்தளிப்ப
வித்தலத்துற்ற வரினித்தலத்துறூரெனக்
கைத்தலத்தேந்திய கனன்மழுவுறமு
மழுவுடைக் கையராகி விழுமிதின்
மாந்தர்யாவருங் காந்தியிற்பொலியும்
வாமிகுகமலைத் திருநகர்ப் பொலிந்தோய்
எழுதாக்கிளவி நின்மொழி யெனப்படுதலி
நின்பெருந்தன்மை நீயே நவிற்றுதல்
மன்பெரும்புலமைத் தன்றே யும்பரி
னின்றோன்ன ரின்மையி னின்னிலை
கூறாய்நீ யெனிற்றேறு நரிலராற்
றன்னுடையாற்றல் முன்னூர்முன்னைத்
தற்புகழ்கிளவி யுந்தகுமென்றம்ம
நிற்புகழ்ந் திசைத்தனை நீயேயதூஉ
விருடீர்காட்சிப் பொருடுணிந் துணர்த்தா
தியங்காமா பினிதுவிது பொருளென
மயங்கக்கூறுதல் மாண்புடைத் தன்றே
யளவில்காட்சியை யையமின் றுணர்த்தலிற்
றளாநிலைமைத் தென்பவென்றலிற்
றன்னுடைமயக்கந் திசைமேல்வைத்துச்
சென்னெறிபிழைத் தோன்றிசை மயங்கிற்றென
மொழிகுவதொப்ப முதுக்குறை வின்மையிற்
பழமறைமயங்கிற் றென்றூமுழுவது
மெய்யாரிசைக்குதும் போலும்
ஐயநின்றன் மையளப்பறி தெமக்கே.

(இ-ள்.) வேனிலான்-மன்மதனது, உருப்பின்-உறுப்புக்களது மென்தசை இறைச்சி-மெல்லிய தசையாகிய இறைச்சியினை, தீ நாக்கு-அக்கினியினது நாக்கு, அறிய-தெரிந்துகொள்ள திருக்கண் திறந்தோய்-நெற்றிக்கண்ணினைத் திறந்தோனே, நால்மறைமுனிவன்-மிருகண்டுமுனிவரது, கான்முளை-மகனாகிய மார்க்கண்டேயன்,

நிற்ப-நிலைத்து இருக்க, விடற்கரும்பாசத்தொடு-விடுதற்கரிய பாசத்தோடு, உடல் பொறைநீங்க-உடற்சுமையானது நீங்கும்படி, உயிர் உண் கூற்றுக்கு-எல்லா வுயிர்களையும் உண்ணுகின்ற யமன்மீது, திருவடி வைத்தோய்-திருவடியால் உதைத்தோய், கருங்கழல் வண்ணன்-கரிய சமுத்திரம்போன்ற நிறத்தை வாய்ந்தவனாகிய விஷ்ணு மூர்த்தி, வெள்விடையாகி-வெண்மை நிறம் வாய்ந்த இடபமாகி, அடிகள் தாங்கிய-திருவடிகளைத்தாங்கிய, உதவிக்கு உதவியினுக்கு, ஊங்கு-ஊழிக்காலத்து, அவன்-அவ்விஷ்ணு மூர்த்தியினது, முழு என்பு-எலும்பு முழுவதையும், சுமந்த-திருமேனியிற்றாங்கிய, கழு முட் படையோய்-கழுவாகிய முட்படையை யுடையோய், தேவாசிரயன் திருக்காவணத்து-தேவாசிரயன் என்கின்ற திருமண்டபத்தில், மேவாநின்ற-பொருந்துகின்ற, விண்ணவர் குழாங்கள்-தேவர் கூட்டங்கள், உருத்திரர்கணங்களென்று-உருத்திரர்கணங்களென்று எண்ணி, ஓடினர்வணங்கி-ஓடிவணங்கி, அருக்கியம் முதல-அருக்கிய முதலியவைகளை, அகன் அமர்ந்து-மனம்விரும்பி, அளிப்ப-செய்ய, இதலத்து-இந்தத் திருவாரூரில், உற்றவர்-வந்து பிறந்தவர், இனி-மற்றொருமுறை, தலத்து உறார்என-இப்பூலகத்து வந்து பிறவார் என்ன, கைத்தலத்து ஏந்திய-திருக்கையிற்றாங்கிய, கனல்மழு உறழும்-வெப்பத்தையுடைய மழுவையே யொத்திருக்கின்ற, மழு உடைக்கையராகி-மழுவாயுதத்தை யுடையவர்களாய், விழுமிதின் பெரிதும், மாந்தர்யாவரும்-அங்குள்ள மக்கள் யாவரும், காந்தியில் பொலியும்-காந்தியோடுகூடி நிற்கும், வரம்மிகு-பெருமைமிகுந்த, கமலைத்திருநகர்-திருவாரூராகிய அழகிய நகரத்தில், பொலிந்தோய் எழுந்தருளியிருப்பவனே, எழுதாக்கிளவி-வேதமானது, நின்மொழி யெனப்படுதலின்-தேவரீர் திருவாக்கு என்று சொல்லப்படுதலில், நின்பெரும் தன்மை-தேவரீரது பெரிய தகுதியினை, நீயே-தேவரீரே, நவிற்றுதல்-கூறல், மன்பெரும் புலமைத்தன்றே-மிக்க அறிவுடைத் தன்று (ஆயின்) உம்பர்-தேவர்கள், நின்னோர் அன்னர் இன்மையின்-தேவரீருக்குச் சமானமானவர் இல்லையாதலால், நின்னிலை-தேவரீரது தன்மையை, நீயே கூறுய் எனில்-தேவரீரே சொல்லாவிடில், தேறுநர் இலர்-தேவரீரது தகுதியைத்தெரிந்து கொள்ளுபவர் இல்லையாகும், (ஆதலால்) தன்னுடையாற்றல் தன்னுடைய வல்லமையை, முன்னோர் முன்னர் தெரிந்துகொள்ளாதவரிடம், தற்புகழ் கிளவியும் தன்னைப்புகழ்ந்துபேசலும், தகும்-தகுதியாம்,



என்று-என்று திருவுளத்தெண்ணி, நீயே நிற்புகழ்ந்திசைத் தனையாக-தேவரீரே தேவரீரது புகழை அருள்செய்தீராயிற்று, இருள்தீர் காட்சிப்பொருள் - மயக்கம் நீங்கிய அறிவினால் பொருள்களை தெரிந்து-துணிந்து, உணர்த்தாது-துணிவுடன் கூறாது, இயங்காமர பின்-உலகமறியாத மரபினால், இது இது பொருளென-இது இதுவே பொருள் என்று, மயங்கக்கூறுதல் உலகம் மயங்கச்சொல்லுதல், மாண்புடைத்தன்று-மாட்சிமையுடையது அல்ல ஆகும், அளவில் காட்சியை-அளவில்லாதகாட்சிப் பொருள்களை, ஐயம் இன்றி சந்தேகமில்லாமல், உணர்த்தலில் - கூறுங்கால், தளரா நிலைமைத்து என்ப-தளராதநிலையையுடையதென்று சொல்லுவார்கள், என்றலில்-என்று கூறினும், சென்னெறி பிழைத்தோன்-செல்லவேண்டிய வழியினின்று நீங்கிய ஒருவன், தன்னுடையமயக்கம்-தான் மயங்கிவழி பிழைத்ததை, திசைமேல் வைத்து - தான் செல்லும் திக்கின்மீது வைத்து, திசை மயங்கிற்று-செல்லும் திக்கானது மயங்கிற்று, என மொழிகுவது ஏய்ப்ப-என்று சொல்லுவதையொப்ப, முதுக்குறை வின்மையில்-நல்லறிவின்மையால், பழமறை மயங்கிற்று - பழமை யாகிய வேதங்கள் மயங்கியது, என்னு - என்று, முழுவதும் மெய் யாது இசைக்கும்போதும் - முழுவதும் மெய்ம்மை கூறாது சொல் லும்போதும், (ஆதலால்) ஐய-ஐயனே, நின் தன்மை - தேவரீரது தன்மையினை, எமக்கு - எம்போலிகளுக்கு அளப்பரிது - அளவிடக் கூடியதன்று.

அடாதது ஒன்றைச்செய்யின் அழிந்துபோவதே திண்ணம் என்பது தோன்ற, வேனிலானுருப்பின் மென்றசையிறைச்சி, தீ நாக்கறியத் திருக்கண்டிறந்தோய்' என்றனர்.

தன்னை யடைந்தார் மாட்டு தலையளியுடையோன் என்பது தோன்ற 'நான்மறை முனிவன் கான்முளை நிற்ப, விடற்கரும்பாசத் தொடுடற்பொறைநீங்க, உயிருண் கூற்றுக்குத் திருவடிவைத்தோய்' என்றனர். காப்புக்கடவுளாகிய விண்டுவும் அவனடிதாங்கும் முறை மையுடையோன் என்பது தோன்ற 'கருங்கடல் வண்ணன் வெள் விடையாகி, யடிகடாங்கிய உதவிக்கு' என்றும் ஊழிக்காலத்து இறந்துபோகும் விஷ்ணுவினது, முழு என்பையும் தாங்கி நிற்கும் தகுதியுடையோன் என்பது போதர 'முழு வெண்புதாங்கிய கழு முட்படையோய்' என்றும், திருவாரூர்த் தோன்றினோர் யாவரும்

பிறவிச்சமுத்திரத்தைக் கடப்பர் என்பது, தோன்ற, 'இத்தலத்துத் தவரினிருத்தலத் துருவொனவும், தன் பெருமையை தானே கூறுதல் தற்புகழ்ச்சி என்பது உலக வழக்காயினும் தமது பெருமையை தாமே யறிவித்தாலன்றி யாவரும் அறிதற்கில்லையாதலால் 'நின் பெருந்தன்மை நீயே நவிற்றுதல் மன்பெரும்புலமைத் தன்றேயும் பரி, னின்னோரன்ன ரின்மையினின்னிலை, கூறாய் நீ யெனிற்றேறின்று நறிலரால்' என்றுங்கூறினர். பொருளல்லவற்றைப் பொருளென் றுணரும் மருட்சியால் மயங்கக்கூறுதல் மாட்சிமையன்று ஆதலால் 'இருவர்காட்சிப் பொருநிலைத் துணர்த்தரியங்காமபினி துவிது பொருளென, மயங்கக்கூறுதல் மாண்புடைத்தன்றே' என்றனர்.

---

## சமயம்

(சித்தாந்தம் 20-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனிச் சமயங்கள் காலபேதத்தினால் விருத்தியெய்தியும் குன்றியும் வரும். சமயிகள் செய்துபோதரும் தருமவிர்த்தியும் அதர்மவிர்த்தியும் முறையே அவ்விரண்டுக்குங் காரணமாம். அங்ஙனம் ஆக்கக் கேடுகள் எய்தினும் மேற்சமயம் மேற்சமயமே. கீழ்ச்சமயம் கீழ்ச்சமயமே. அசற்சமயங்கள் சமயிகளுக்கு அரசு செல்லுங்கால் விருத்தி யெய்தியும் அரசு செல்லாக்கால் குன்றியும் வரும். சற்சமயங்கள் இரண்டு காலத்தும் தன்மை சிறிதும் குன்றாது ஒரு பெற்றியாகவே நின்று விளங்கும். நல்லறிவில்லாத மக்கள், அரசோடுகூடி ஆக்கமடையுஞ் சமயங்கள் நியாயபலமில்லாதவைகளாயினும், நியாயபலமுடையனவென்று அவைகளைப் பாராட்டாநிற்பர். விவேகிகள் அதுபற்றி அங்ஙனம் பாராட்டல் செய்ய இசையார். என்னை? "இருவேறு உலகத்தியற்கை, திருவேறு, தெள்ளியராதலும் வேறு," "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருண் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்னும் உண்மைபற்றித், தீயோர் ஆக்கமும் நல்லோர் நல்குரவுங் கண்டுழி, செல்வம் ஏதுவேறு ஞானம் ஏது வேறு என்று வேறுபாடு செய்தும், ஒரு பொருளினை அதன் ஸ்தடத்தப்பொலிவுபற்றிமயங்கி வேறுபட வுணராமல் மெய்யாய் நின்ற சொரூபம்பற்றி ஆராய்ந்தும், உண்மைதேற வல்லராதலாலென்க.



இனி வேதாகமபுராண இதிகாசமுதலிய சமயசாஸ்திரங்களாலும் தர்க்கமுதலிய பல கலைநூல்களாலும் நிறுத்தப்பட்டு மிகமேலாகி விளக்கமுற்று வரும் நமது வைதிகசமயங்கள், நம்மனோர் வேதாகமபுராண இதிகாச முதலிய சமய சாஸ்திரங்களையும் தருக்கமுதலிய கலைநூல்களையும் பிரீதியோடு கல்லாமையினாலும், எங்கேனுஞ் சிலர் கற்றாலும் பிறர்க்குக்கற்பித்தலும் எல்லாரும் எளிதில் அறிந்துய்யத் தெளிவாகப் பிரசங்கித்தலுஞ் செய்யாமையினாலும், இக்காலத்தில் வரவரக் குன்றுகின்றன! பகற் பொழுதெல்லாம் பானுவின் கிரணப்பரப்புள் அடங்கி ஒளிகுன்றி யொடுங்குந் தாரகாகணங்கள், அப்பானுவின் கிரண விளக்கங் குறையும் இராப்பொழுதில் வெளிவந்து விளங்கி வீக்கம் பெரிது காட்டுதல் போல, முன்னெல்லாம் வைதிகபானுவின் பெரிய ஞானப் பிரகாசத்துள் அடங்கி வலிகெட்டு ஒடுங்கிக்கிடந்த பரசமயகணங்கள் வைதிகசமயங்கள் விளக்கங் குறையும் பெற்றநோக்கி இக்காலத்து வெளிவந்து தலையெடுப்புற்று வீக்கங்காட்டுகின்றன! அதுபட்டோ, பெருவலியுடைய மிருகவேந்தாகிய சிங்கம் அருவரைமுழையில் அடங்கி யொடுங்கியிருக்கும் வலிமிக்க ஒடுக்கத்தினைக்கண்ட மரையும் மானுங் கேழலும் வேழமும், வலியில்லாத ஒடுக்கமென்று விபரீத சிந்தனைசெய்து, 'இதனோடு பொருதுவென்றி யெய்துவமென்று' குறித்துப்பகைத்து எதிரேறுதல்போலக், காலங்கருதியிருக்கும் வைதிக சமயங்களின் சூழ்ச்சி பொருந்திய மாட்சிமையொடுக்கத்தைக் கண்ட பரசமயகணங்கள், வலியில் ஒடுக்கமென்று விபரீதசிந்தனைசெய்து, இவற்றோடு பகைத்துப் பொருது வென்றியெய்துவம்' என்று குறித்துத் தருக்கிச் சொற்போர்புரிய முற்படுகின்றன! இனி அரண்வலி மிகவுடைத்தேனும், அதன் அகத்திருக்கும் வீரர் மன வலிகுன்றிச் சாம்பின், அது வலி அழிவெய்தும். அரண்வலி மிகவுடைத் தன்றேனும், அதன் அகத்து இருக்கும் வீரர் மனவலியுற்று முயலின், அது வலிமிகவுற்று நிலைபெறும் அதுபோல, நமது வைதிக சமயங்கள் எல்லா நலமும் எல்லா வலியுமுடையனவேனும், வைதிகர்களாகிய நம்மனோர், வைதிக சமய சாஸ்திரங்களையும் தருக்கமுதலிய கலைநூல்களையும் பிரீதியோடு கற்றும், பிறர்க்குக் கற்பித்தும், எல்லாரும் எளிதில் அறிந்துய்யப் பிரசங்கித்தும், சமய விர்த்தி செய்யாமல் சோம்புற்றிருப்பின், மெய்விளக்கங் குன்றுவனவாம். அசற் சமயங்கள் நலமும் வலியும் இல்லன

வேணும், அச்சமயிகள் அச்சமயநூல்களைப் பிரீதியோடு கற்றும் கற்பித்தும் பிரசங்கித்தும் ஊக்கத்தோடு சமயாபிவிர்த்தி செய்து வரின், மெய்ம்மையுடையனபோல விளக்க முறுவனவாம். இங்ஙனமாகலின், வைதிகசமயங்களின் விளக்கக்குறைவு அவற்றின் வலிக்குறைவால் நேர்வதன்று, சமயிகள் முயற்சிக்குறைவாற்றானே நேர்வதாமென்றும், அசற் சமயங்களின் விளக்கம் அவற்றின் பொருள் வலியால் நேர்வதன்று, சமயிகள் முயற்சியினால் நேர்வதேயாமென்று முணர்க. இனி நம்முயிர்க்கு உறுதி தரும்பொருட்டுப் பெருங்கருணைத் தடங் கடலாகிய முதற்கடவுள் நிறுத்திய வைதிக அருட்பெருஞ் சமயங்கள் விளக்கங் குன்றாமல் அவைகளைப் பிரதிஷ்டை செய்தல் நாமெல்லாம் அத்தியாவசியகஞ் செயற்பாலதாம் பரம புண்ணியமாம். இனி வைதிகர்களாகிய நாம் அத்தியாவசியகம் செயற்பாலனவாகும் சமய ஸ்தாபன சருமங்களாவன: வைதிக சமயநூல்களையுந் தருக்க முதலிய கலைநூல்களையும் நன்றாகக் கற்றல், கற்பித்தல், பிரசங்கித்தல், இலக்கண அமைவும் நியாயபலமும் பொருந்த வைதிக ஸ்தாபன கிரந்தங்கள் பரசமய கண்டன கிரந்தங்கள் இக்காலத்துக் கேற்பச்செய்தல், பழைய வைதிக சமய ஸ்தாபன கிரந்தங்களும் பிறவும் இறந்துபோகாமல் பாதுகாத்தல் முதலியனவேயாம்.

மிடிகாரணமாக அல்லது பகைகாரணமாகத் தங் குடிகெட வந்தவிடத்து, அம்மிடி பகைகளைத் தீர்த்துக்குடியை ஓம்புதல், அக்குடிப் பிறந்த நன்மக்களுக்குக்கடனும்; அதுபோலவே சமய நூல் அறிவு பேணாமைகாரணமாக அல்லது பரசமய வாதிகள் வாதப்போர் காரணமாகத் தஞ்சமயங் குன்ற வந்தவிடத்து, சமய நூல் அறிவை அபிவிருத்திசெய்தும் பரசமய கண்டனஞ் செய்தும் தஞ்சமயத்தை ஓம்புதல், அச்சமயத்துப் பிறந்த விவேக புருஷர்களுக்குக் கடனன்றோ! இனிக் குலத்தைக்காப்பாரைக் குலத்தாரே தெய்வமாகக்கொண்டு வழிபடுவர்; சமயத்தைக் காப்பாரைச் சமயத்தரெல்லாரும் தெய்வமாகக்கொண்டு வழிபடாநிற்பர். குலங்காப்பவர்புகழ் குலமுள்ளவரையு நிற்கும்; சமயங் காப்பவர்புகழ் உலகமுள்ளவரையும் நிற்கும். இவர்க்கு உண்டாகும் இம்மைப்பயன் அளவு இவ்வளவாயின் மறுமைப்பயன் அளவு சொல்லி முடியுமோ!



இன்னும், இவ்வுலகத்திலே மாநுடர் ஒவ்வோர்தொடர்ச்சி பற்றிச்செய்து போதரும் அபிமானங்கள் சாதியாபிமானம், தேசாபிமானம், பாஷாபிமானம், சமயாபிமானமெனப் பலவகைப்படும். அவற்றுள், சாதியபிமானத் தினைநோக்கத் தேசாபிமானம் உயர்ந்தது. தேசாபிமானத்தினைநோக்கப் பாஷாபிமானம் உயர்ந்தது. பாஷாபிமானத்தினைநோக்கச் சமயாபிமானம் உயர்ந்தது. சாதியபிமானம் தேசாபிமானம் பாஷாபிமானங்கள் உயிர்க்குப் புறம்பாயுள்ள ஒவ்வோர் பொருள்பற்றி உயிர்களிடத்து நிகழுங் குணங்களாம். சமயாபிமானம் உயிர்க்குயிராகிய கடவுள் சம்பந்தங் காரணமாக உயிர்களிடத்துவிளங்கும் ஞானகுணமாம். ஆதலால், மனிதர் மற்றை அபிமானங்களினும் சமயாபிமானத்தினையே அதிக சிரத்தையோடும் பெரிதுபோற்றி ஒழுகுதல்வேண்டும். இனித்தஞ் சமயங் குன்றவருமிடத்து அது அபிவிர்த்தி யெய்துதற்கு வேண்டும் முயற்சிகள் செய்யாது சும்மாவிருந்து கொண்டு நாம் சமயாபிமானம் பெரிதுடையோமென்று வாயால் வெறுஞ் சொற்பிதற்றித் தம்மைத் தாமே மதித்து இறுமாப்படையும் வெறுஞ் செம்மாப்பு நாடகமாமன்றிச் சமயாபிமான மாகாது. சமயப் பிரதிஷ்டை ஏனைப் பிரதிஷ்டைகளின் மேம்பாடுடைய தென்பது, சாதிப்பிரதிஷ்டை தேசப்பிரதிஷ்டை பாஷைப்பிரதிஷ்டை செய்த மேலோர்களை நோக்கச் சமயப்பிரதிஷ்டைசெய்த மேலோர்களைப்பிரித்து மிக மேலோர்களாகவைத்து வழிபடும் உலக அநுஷ்டானத்தினாலும் இனிது விளங்கும்.

இன்னும், சமய வழி நின்று தம்மை வழிபட்டு உய்தற்கே பக்குவமிக்க உயிர்களுக்கு அருமையான மாநுடப்பிறவி கடவுளாற் கொடுக்கப்படுவதாம். அவ்வருமையான மாநுடப்பிறப்பினை எய்திய மனிதர் சமய வழி நின்று தெய்வம் வழிபட்டு இருமை இன்பமும் பெற்றுய்தற்கு வாய்ப்புடைய கருவியாகும் அதனைத் துர்விநியோகஞ் செய்வாராயின், அப்பிறப்பு அவர் தமக்குப் பயன்படாமல் வீணே கழிந்து அழிவெய்துவதாகும். இனி அப்பிறப்புப் பின்னர் எய்தலோ மிகஅரிது. ஆதலால், கடவுள் அருளால் அரிய மக்கட் பிறப்பெய்திய புருஷர் அப்பிறப்புத் தமக்குப் பயன்படும்பொருட்டுக் கடவுள் தமக்கு அருளிய சமயங்குன்றாமல் அதனைப்பெரிது போற்றி நின்று அதன் வழிநடந்து அவர் அருளால்

இருமை இன்பம் எய்த முயலுதலே விவேகமாம். இனிச் சமய நடை விரும்பாது பிராகிருத நடை மேற்கொண்டு ஜீவிக்கும் மனிதர் பிறப்பான் மக்கள்போலக் காணப்படினும், தம்முயிர்க் குறுதி பேணாமையால், தம்முயிர்க் குறுதிபெறும் விவேக முயற்சியில்லா மிருகங்களோடு ஒப்ப மதிக்கப்படுவரன்றிப் பகுத்தறிவுடைய மக்களாக மதிக்கப்படமாட்டார்.

இனிச் சமயநெறி சாராது நாஸ்திகம்பேசி உலக வாழ்வினையே பொருளாகக்கொண்டு ஒழுகும் மக்களுஞ் சிற்சிலர் உலகத்துளராகலின், மக்கட்பிறப்புச் சமயஞ் சார்ந்து அநுஷ்டித்துத் தத்துவ ஞானமெய்தி வீட்டின்பம் அடைதற்குச் சாதனமாகக் கடவுளாற் கொடுக்கப் படுவதென்பது பொருந்துமாறு எப்படியெனின், அது பொருந்துமாறு சொல்லுதும்:—நாஸ்திகம் பேசி உலகமே பொருளாகக்கொண்டு வாழும் மக்களும் சமயஞ் சார்ந்து நிற்கும் மக்களென்றே கொள்ளப்படுவர். பதி பசு பாச பதார்த்தசொரூபம் தெரியமாட்டாது நாஸ்திகம் பேசுதல் மாத்திரையால் அவரைச் சமயஞ்சார்ந்து நிற்கும் மாந்தரல்லரென்று கொள்ளுதல் அடாது. என்னை? அவர் காட்சியென்னும் பிரமாணமும், ஸ்தூல பூதக் கடவுட் பதார்த்தமும், அப்பூதக்கூட்ட விகாரமாகிய ஜீவான்ம பதார்த்தமும், பூத காரியமாகிய பல தாத்துவிக பதார்த்தங்களும், ஜீவாத்ம இம்மைப் பந்த முத்திச் சிறுகொள்கையும், இவ்வுலக வின்பசாதனமாகும் லௌகிக தரும அநுஷ்டானங்களும், மெய்யென்று சமயங் கொண்டு அநுஷ்டிப்பர். அவர் கொள்கை உலகாயத சமயமெனப் படும். உலகாயதம் இகபோகங்களிற் கழிபெரும் பற்றுடையபிராகிருதர்பொருட்டு வேண்டப்பட்டுச் சமயசோபான வரிசையில் முதற் சிறுசோபானமாக நிறுத்தப்பட்ட தொருசமயம். இனி மனிதர்கள் இகபோகவாசை மிகவுடையராங்கால் உலகாயத சமய நிலையுடையராயும், இகபோக வைராக்கிய முதிக்கப்பெற்றுப் பாரமார்த்திக ஒழுக்க விருப்பமிகவுடையராங்கால் உலகாயத சமயத்தரல்லராய் மேற்சொல்லிய சமயவேறுபாடுகளுள் ஏற்பதொரு சமய நிலையுடையராயும், இருப்பர்கள். ஆதலால், மக்களுக்கு உலகாயத சமயவொழுக்கம் மற்றைச்சமயவொழுக்கம்போல ஒரு நிலையுள்ள சமய வொழுக்கமாகமாட்டாது. இச்சமய வொழுக்கம் பெரும்பான்மையாகப் புறப்புறச்சமய வகுப்பார்களிடத்துப் புத்தி சலனங் காரணமாக நிகழ்வதொரு ஞானுபாச குண வியாபார மாத



லால், அது அந்தப் பிராகிருத சாமானிய சமயங்களின் ஆபாசமாய் அவற்றின் இறுதிக்கண் வைத்து எண்ணப்படும். இந்த நியாயங்களால், அந்த நாஸ்திகவாதிகளும் சமயச் சார்புடையவர்களேயென்றும், அதனால் மனிதப் பிறப்புச் சமய அநுஷ்டானம்பேணி உய்தற்பொருட்டே அறிவு விசேடமுடைய உயிர்களுக்குக் கடவுளாற் கொடுக்கப் படுவதொரு உயர் பிறப்பென்பது பொருத்தமுடைத்தென்றும், சமயச் சார்பில்லா மாந்தர் உலகத்தில் அரியரென்றும், ஒரு தலையாக அறிக. இனிப் புத்தர், ஆருகதர் சாங்கியர், மீமாஞ்சகரும் பிறரும், நித்தியாநித்திய பதார்த்த இலக்கணங்களும் பந்தமுத்தி இலக்கணங்களும், உண்மையாக அறியமாட்டாத நாஸ்திகர்களேயாயினும், அவரெல்லாம் நான்கு பூதங்களுக்கு மேலாகச் சூக்கும பதார்த்தங்களுண்டென்று நிச்சயிக்க வல்லராதலாலும், உலகாயதர் நான்கு பூதங்களுக்கு மேலாகச் சூக்கும பதார்த்தமுண்டென்று நிச்சயிக்க வல்லரல்லராதலாலும், அறிவுடையோர் உலகாயதரையே நாஸ்திகரென்று பெரும்பான்மைபட வழங்குவாராயினரென்றுணர்க.

இனி இக்காலத்தில் வேதசமாசத்தார் பிரமசமாசத்தார் என சிற்சிலர் தோன்றித், தாம் தாம் யுக்தியினாற் புதிதாகச் சில கொள்கைகள் கற்பித்து, வைதிக சமயக்கொள்கைகளோடு அவைகளைக் கலந்து புதிய சமயங்கள் சில உண்டாக்கி, அவைகள் வைதிக சித்தாந்தங்களாகுமென்று கற்பித்துக்கூறுங் கொள்கைகள், அங்காங்கி பாவமும் ஐக்கிய பாவமும் உடைய வைதிக கரும காண்ட ஞானகாண்ட அநுஷ்டானங்கள் தம்முள் ஒன்றற்கொன்று ஐக்கியம் இல்லாதனவென்று மாறுபட அந்தச் சித்திரம் விளைத்தலாலும், ஞானங்கமான கர்ம நஷ்டமுண்டாக்கலாலும், ஞானப் போலியைத் தத்துவஞானமென்று சொல்லுதலாலும், புறப்புறச் சமயச் சார்பாயுள்ள விவிலிய சமயக்கலப்புடையவைகளாய் இருத்தலாலும், அச்சமய ஸ்தாபனங்கள் வைதிக சமய ஸ்தாபனங்கள் ஆகமாட்டா. ஆதலால், வைதிக மேன்மக்கள் ஆராய்ச்சியின்றித் தஞ்சமய நிலைவிட்டுச் சடுதியில் அவற்றிற் பிரவேசித்தல் புத்தியாகாது. இன்னும், இக்காலத்துப் பாதகண்டத்துப் புறத்துள்ளார் சிலர் தமது விவிலிய புத்த சமயக்கொள்கைகளை வைதிக பாதஞ்சல வியாச சித்தாந்தங்களோடு கலந்து, புதுச் சமயம் ஒன்றுகட்டி அங்கங்கே போதிக்கின்றனர். அவர் தம்

விவிலிய சமயப்பொய்மை தெளிந்தும் நஞ்சம்பங்களைக் கடைப்பிடித்து அவை நல்லனவென்று போதிக்கத்தலைப்பட்டது வியக்கற்பாலதொரு விவேகமுயற்சியேயாம். ஆயினும், அந்த விவேக புருஷர்கள் அறியாமையினால் அவைதிக சமயசாங்கரியமுற்றுத் தோஷப்படும் அவர் வைதிக போதனையை நம்மனோர் அங்கீகாரஞ்செய்து பாராட்டுதல் தக்கதன்று. வைதிக சமய நஷ்டத்தினைத் தமக்கு விளைவிக்கும் இந்த நூதன சமயங்களை வைதிக சமயங்களென்று நம்மனோர் அங்கீகாரஞ் செய்தற்குக் காரணம் தங்கள் வைதிக சமய சாஸ்திரங்களைக் குருமுகமாக நன்கு கற்று அவற்றின் உண்மைகாணப் பெறாமையேயாம். அது நிற்க.

இனி வைதிக சமயிகள் தம்முள் முரணிச் சமயவாதப் போர் செய்தல் தகுதியாகாது. வைதிக சமயிகள் ஈசுரன் ஆத்மா ஜகம் பந்தம் முத்தி என்பனவற்றின் ஸ்தடத்த சொரூப இலக்கண விவகார வேறுபாடுகள் பற்றிப் பல்வேறு சமயப்பகுப்பினராயிருப்பினும், சைவம் ஸ்மார்த்தம் வைஷ்ணவம் மாத்துவமென்னும் நான்குபெருஞ்சமய வரம்புட்பட்டு நடப்பர். இந்நான்கு சமயங்களும் அநாதிவைதிக சித்தாந்த வித்தைகளையும் அவற்றின் வழிவந்த கலைகளையும் மூலமாகக்கொண்டு போதருவனவாம். ஆதலால், இவர்கள் தாந்தாந்தழுவிய சமயங்களின் தாரதம்மியங்களை விசாரஞ்செய்ய விரும்புங்கால், பகைவர்போல மாறுபட்டுக் கலாய்த்தலையொழிந்து, நட்டார்போல அறிவொற்றுமையுற்றுக் கலந்து பிரமாண வரை நின்று, தங்கள் சமயதாரதம்மிய விசாரஞ்செய்தலே விவேகமாம். இவ்வாறு செய்தலையொழிந்து, ஒருவரோடு மற்றொருவர் சமயாபிமானப்பகைமேற்கொண்டு, தெய்வநிந்தை சாஸ்திரநிந்தை பெரிதுஞ்செய்து பிளவுபட்டு வலியழிந்து, அவைதிக சைவ சமயப் பகைவர்கள் தம்முட்புகுந்து தம்முரிமைப் பெருநிதிகளை வெளவிக் கேடுகள் உண்டாக்குதற் கேதுவாகும். உட்சமய கலாம் விளைத்தல் விவேகமன்று. ஒரு குடிப்பிறந்த மேன்மக்கள் தம்முள்ளே நேர்ந்த ஒரு விவகாரங் காரணமாக வாதி பிரதிவாதியென இருபகுதிபட்டு நியாய வாதந்தொடுப்பரேனும், விவகாரம் தமக்கு அநுகூலமாதற்கு எதுவாகும் மரியாதையுடைய நியாய கதியினையே தமக்குப் பற்றாக நாடிக்கொள்வர். அதுவன்றி, விவகாரப் பிரதிகூலமும் உரிமை நஷ்டமு முண்டாதலோடு பகைவர்கள் உட்புகுந்து தம்மை அடிமை கோடற்குக் காரணமாகும்



மரியாதையில்லா அநியாய வாதத்தினைத் தமக்குப் பற்றாகக்கொள்ள மாட்டார்.

இனி வைதிக சமய பரிபாலன விரதம் வைதிக நாற்பெருஞ் சமயத்தாரெல்லாரும் பொதுவாக அநுஷ்டிக்கற்பாலதொரு பரம தருமமேயாம். ஆயினும், வைதிக சாஸ்திரங்களில் வல்லராய் வைதிகசமய நாயகத்தன்மை பூண்டு வாழும் வைதிகாசாரியர்களும் வித்துவான்களும் இந்த வைதிக சமய பரிபாலன விரதத்தினை மற்றையோரினுந் தமக்குப் பெருங் கடப்பாடாகவும் சிறப்பாகவுங்கொண்டு அநுஷ்டித்தல் முறையாம். வைதிக சமய பரிபாலனத்தினை இவ்வாறு கொண்டு அநுஷ்டிக்கும் வைதிகாசாரியர்களும் வித்துவான்களுமே வைதிக மகாசனங்களால் கருணைவள்ளல்களென்று போற்றி வழிபடத்தக்கவராவர்.

சமயவியற்கைபலவும் பொதுவாகத் தொகுத்தெடுத்து இங்ஙனம் உரைத்தோம். சமயங்களின் சிறப்பியல்புகளை இதன்கண் விதந்தெடுத் துரைத்திலேம். அவைகளை விரிந்த வைதிகசித்தாந்த நூல் உரைகள் பற்றித் தெரிந்து கொள்க.

(ஞானாமிர்தம்.)

சமயமுற்றிற்று.

---

## வேதசிவாகமங்கள்

(சித்தாந்தம் - 8-ம் தொகுதியின் 236-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனி ஆலய வழிபாடு வேதங்களில் இல்லையோ என்பதைச் சிறிதாராய்வாம்:—வேதங்களின் பெருநோக்கம் யாகாதி கருமங்களை விதித்தலே என்பது மேலே காட்டப்பட்டது. ஆகவே அவற்றில் ஆலய வழிபாட்டுக்குரிய கிரமங்கள் எடுத்துப் பேசப்படும் என்று நாம் காத்திருப்பது கூடாது. ஆனால் வேதங்களை ஆராய்ந்த உபமன்யு, பதஞ்சலிமுதலிய மகான்களெல்லாம் ஆலயவழிபாடு வேதங்களுக்கும் சம்மதமாதல்பற்றியே வேதமந்திரங்களை ஆலய வழிபாட்டில் எடுத்தாளும்படி விதித்துள்ளார். வேதங்களிலே சிவலிங்க வழிபாடு அமைந்திருக்கும்போது அந்தச் சிவலிங்கத்துக்கு நிலைக்களமாயுள்ள ஆலயங்களை வேதங்கள் அநுசரிக்கவில்லை

என்பது அமையாது. வேதங்களிலே பல தலமான்மியங்கள் எடுத்துச்சொல்லப் பட்டுள்ளன. வேதங்களிலே யாகங்களின் பொருட்டு மூர்த்தியை வரித்தலும், கும்பத்தில் ஆவாகித்தலும் நிவேதனம் செய்தலும் தூப தீபாதி ஆராதனை புரிதலும் பிறவுமாகிய கிரமங்கள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கும்போது இக்கிரமங்களையே ஆதாரமாகக்கொண்ட ஆலயவழிபாடு வேதத்துக்கு அந்நியமானதென்று நாம் சொல்வது சிறிதுங்கூடாது. இன்னும் ஆலய அமைப்புக்குரிய நியமங்கள் எல்லாம் யாகங்களின் பொருட்டு வேண்டப்படும் குண்டம், மண்டலம், மண்டபம், வேதிகைமுதலியவற்றின் பொருட்டாக வேதங்களினால் விதிக்கப்பட்டுக் கிடக்கும்போது ஆலயசேவை வேதோக்தமானதல்ல என்று நாம் சொல்வதெங்ஙனம்? வேதத்திலே சொல்லப்பட்ட யூபஸ்தம்பம், பலியாசனம், பசுபந்தனம், முதலாயின எல்லாம் ஆலயங்களிலே துவசஸ்தம்பம், பலிபீடம், கொடி, கயிறுமுதலியவாக அமைந்திருக்கும்போது வேத வழிபாடு ஆலய வழிபாட்டின் வேறென்று நாம் சொல்வது கூடாது. ஆலயங்கள் வேதவழி பாட்டுக்குரிய நிலைபெறமைந்த நிலயங்கள். யாகசாலைகள் அவ்வழிபாட்டின் பொருட்டு அவ்வக் காலத்தே செய்யப்படும் சங்கற்ப நிலயங்கள். இந்தச்சங்கற்ப நிலயங்கள் நிலைபெறுன நிலயங்களைப்பார்த்தே செய்யப்படுவனவாதலால் வேதகாலத்திலே ஆலயம் இல்லை என்பது ஒரு சிறிதும் பொருந்தாதென்க.

யாகங்களிலே அமைக்கப்படும் ஓமகுண்டமும் அதனகத்து வளர்க்கப்படும் அக்கினியுமே காலாந்தரத்தில் ஆவுடையாரும் சிவலிங்கமுமாக வழங்கப்படுவனவாயின என்று வாதிப்பாருஞ் சிலருளர். ஓமாக்கினிக்கும் சிவலிங்கத்துக்கும் வடிவளவால் ஒற்றுமை இருத்தல்பற்றி ஓமாக்கினியே காலாந்தரத்தில் சிவலிங்கமாய்ப் பரிணமித்தது என்பது அமையாது. டார்வின் பண்டிதருடைய பரிணாம சித்தாந்தம் ஒற்றுமையுடைப் பொருள்களுக்கெல்லாம் அமைவுடைத்தென்பதோர் விபரீதவிளக்கம் இக்காலத்தில் தலைப்பட்டுக் கொண்டது. கருடனும் காக்கையும் வடிவளவால் ஒற்றுமையுடைமைபற்றி கருடனே காக்கையாய்ப் பரிணமித்ததென்று சொல்வது கூடாது. பொருள்களுடைய உபயோகம் பற்றியும் செய்வோரது செயன்முறை பற்றியும், அவற்றின்கண் ஒற்றுமை காணப்படுவது சகசமேயாம். இது கொண்டு அவை ஒன்றினொன்



றாகத் தோன்றினவென்றாவது, ஒன்றைப்பார்த்தொன்று செய்யப்பட்டதென்றாவது நிச்சயிப்பது சிறிதுங்கூடாது. பண்டிதர் மாக்ஸ் முல்லர் சமயக்கொள்கை யளவிலே பலர் பல சாதியாரிடத்தே பலப்பல ஒற்றுமைகளை எடுத்துக்காட்டி அந்தக் கொள்கைகள் அந்தந்தச்சாதியாரிடத்திலே அந்தந்தக் காலத்திலே அவரவர் கருத்தில் நின்று உதித்தன அல்லாமல் ஒருவரிடத்திருந்து ஒருவர் பெற்றுக் கொண்டதல்ல என்று பல நியாயங்கொண்டு சாதிக்கின்றார். ஓமாக்கினியாலும் சிவலிங்கத்தாலும் உணர்த்தப்படும் பொருள் ஒன்றேயாதலாலும், அவ்விரண்டும் ஒருவாற்றானே விதிக்கப்பட்டமையாலும், அவற்றின் கண் ஒற்றுமை இருத்தலேவேண்டும். ஒரு விஷயத்தை இரண்டு வகுப்புப் பிள்ளைகளுக்கு விளக்குமிடத்து வேறு வேறு முறையாக விளக்குமுகத்தால், அவற்றுள் ஒருமுறை மற்றைய முறையில் நின்று தோன்றியதென்றும், ஒன்று மற்றையதிற் பிந்தியதென்றும் ஒருவரும் சொல்லத்துணியார். ஓமாக்கினியும் சிவலிங்கமும் பக்குவபேதமுடையார் பொருட்டாகவும், வேறு வேறு உபயோகங்கருதியும் விதிக்கப்பட்டுளவாதலால், அவை ஒரு பொருளை உணர்த்துதற்காக எழுந்த இருமுறைகளாம். அவை ஒன்றிலொன்றாக உதித்தன என்பது ஒருவாற்றானும் பெறப்படாது. ஆகவே, ஓமாக்கினியை விதிக்கும் வேதங்கள் முந்தின என்றும் சிவலிங்காராதனையை விதிக்கும் ஆகமங்கள் பிந்தின என்றும் சொல்வது சிறிதும் கூடாது.

இங்ஙனமாகவும், இந்தக்காலத்திலே சரித்திர ஆராய்ச்சிமுறை என்பதொன்றை எடுத்துக்கொண்டு அந்த முறையை எல்லா இடங்களிலும் நம்மவருட் சிலர் எடுத்தாளுகின்றார்கள். இது, அந்த முறையை அபாவனைபண்ணி அதனுக்குத்தானுந் தீங்குசெய்தலாகும் என்பதை இவர்கள் சிந்திக்கின்றார்களில்லை. சாத்திர ஆராய்ச்சி முறையாகிய லௌகிக அளவைகொண்டு சமயசாத்திரங்களைப் பரீக்ஷித்தல் முகத்தலளவைகொண்டு முதலை அளந்தாலொக்கும். சமய சாத்திரங்களிலே லௌகிக சம்பந்தமுமுண்டாயினும், அவற்றைப் பரீக்ஷிக்குமிடத்து, தத்துவஞானமும் உடங்கியைந்து சென்றாலன்றி உண்மை புலப்படுவது கூடாது. சைவசமய சாத்திரங்களைப் பரீக்ஷிக்குமிடத்துத் தத்துவஞானமே பெரிது வேண்டப்படும். சைவசமய சாத்திரங்கள் சரித்திரகாலவரையறையிற் பட்டனவல்ல. அவைகள் மானுஷ்ய சம்பந்தமுடையனவு

மல்ல. அவைகள் எல்லாம் அருண்முறையால் தோன்றிய அருணூல்கள். அருண்முறையால் தோன்றிய அந்தச்சாத்திரங்களை மருண்முறையால் தோன்றிய மானுடவாக்கை அளக்குங் கருவிகொண்டு அளப்பது அருண்முறையின் அருமையை அறியாத நாத்திகர்செய்யத்தக்கதன்றி நம்மவர் செய்யத்தக்கதல்ல. எங்கள் சமயச் சுருதிகள் எல்லாம் அருண்முறையால் தோன்றின என்று அவைகளே முழங்கும்போது அந்தச் சுருதிகளை விசுவசித்துப்பூசிப்போமாகிய நாம் அவற்றது சாட்சியத்தை அலட்சியஞ்செய்துவிட்டு அவற்றை மருண்முறையாகிய மானுஷ்ய ஆராய்ச்சி முறைகொண்டு அளப்பது, கலிகாலத்தின் வலியன்றி மற்றென்னென்று நாம் சொல்லலாம். எமது சமய சாத்திரங்கள் அருண்முறையால் தோன்றினமைக்கு அவற்றது சாட்சிய மாத்திரமன்றி அயற்சாட்சியங்களும் பலவுண்டு. உலகத்துள்ள சமய சாத்திரங்கள் எவற்றிலும் எமது சமய சாத்திரங்களே மிகப் பூர்விகமானவை. உலகத்துள்ள சமய சாத்திரங்கள் எல்லாம் ஓர் ஒருகாலத்திருந்த ஓர் ஒருவரால் செய்யப்பட்டனவாக எங்கள் சமய சாத்திரங்களே மனிதரால் செய்யப்பட்டன என்று வாதித்தற்கு இடங்கொடாது நிற்பன. ஆகவே உலகத்துள்ள சாத்திரங்கள் எவற்றிலும் அருண்முறையால் தோற்றினமைக்கு அருகமாய் நிற்கும் உரிமை எமது சமய சாத்திரத்துக்கே உள்ளது. அதுமட்டோ! எமது சமய சாத்திரத்திற்பொதியப்பெற்றுள்ள தத்துவஞான நுட்பங்களும், அது அருண்முறையால் தோன்றினமைக்குத்தக்க சான்றாகும். அதனகத்துள்ள மந்திர இரகசியங்களும், அந்த இரகசியங்களாற்பெறப்படும் சித்திகளும் அது அருண்முறையாற்றோன்றியதென்பதற்குப் பிரபல சாட்சியங்களாகும்.

இங்ஙனம் அருண்முறையால் தோன்றிய வேத சிவாகமங்களைச் சரித்திர ஆராய்ச்சி முறைகொண்டு அளக்கத் துணிகின்ற நம்மவரது விவேகத்தை நாம் யாதுக்கு ஒப்பிடலாம்!!

ச. சபாரத்தினமுதலியார்,

யாழ்ப்பாணம்.

உ

திருச்சிற்றம்பலம்.

# சிவப்பிரகாச வியாக்கியானம்

18715
சென்னை-600 005.

காப்பு.

திருமேவு முண்மைச் சிவப்பிரகா சத்தின்
மருமேவு பேருரைக்கு மாணாச்—செருமேற்
றொடக்குஞ் சமர்க்கட் சுரிகுழன்மான் றந்த
கடக்குஞ் சரக்கன்றே காப்பு.

இந்தச் சிவப்பிரகாசமென்று சொல்லப்பட்ட நூலுக்கு வரலாறாவது பூரணகர்த்தாவாயிருக்கும் ஸ்ரீகண்ட பரமேஸ்வரர் தாமருளிச்செய்த முன்னூலாகிய சிவாகமத்தின் ஞானகாண்டமாயிருக்கப்பட்ட பதிபசு பாசத்தினுண்மையை ஸ்ரீநந்திதேவ பிரானார்க்குக் கடாக்ஷித்தருள அந்த உபதேசத்தின் பயனாயிருக்கப்பட்ட சிவஞான போதமாகிய மூலக்கிரந்தம் பன்னிரண்டையும் ஸ்ரீநந்தி தேவ தம்பிரானார் சனற்குமார பகவான் முதலாயுள்ள இருடிகளுக்குக் கடாக்ஷித்தருள அந்தச் சனற்குமார பகவான் சத்தியஞான தரிசனிகளுக்குக் கடாக்ஷித்தருள அந்தச் சத்தியஞான தரிசனிகள் பரஞ்சோதிமா முனிகளுக்குக் கடாக்ஷித்தருள அந்தப் பரஞ்சோதி முனிகள் திருவெண்ணெய் நல்லூரே திருப்படை வீடாகவுடைய மெய்கண்ட தேவ தம்பிரானார்க்குக் கடாக்ஷித்தருள, அந்த மெய்கண்ட தேவ தம்பிரானார் அந்த மூலக்கிரந்தம் பன்னிரண்டின் வழியே பன்னிரண்டு சூத்திரமாக வகுத்து அந்நூற் பெயராலே சிவஞான போதம் என்னுந் திருநாமத்தினையுஞ் சார்த்தி வழிநூலாகச்செய்தருளித் தமது திருவடியைப்பெற்ற அருணந்திதேவ தம்பிரானார்க்குக் கடாக்ஷித்தருள, அவரந்நூலை யாராய்ந்து பார்த்தருளி அந்நூற்சொற் சுருங்கி அர்த்தமாழ்ந்திருக்கையினாலே அந்நூலினர்த்தத்தை விரித்துச் சிவஞானசித்தி என்னுந் திருநாமத்தினையுஞ் சார்த்தி வழிநூலாகச்செய்தருள, இந்த இரண்டு நூலையுங்கொற்றவன் குடி உமாபதி தேவதம்பிரானார் திருவுள்ளத்தடைத் தருளியந்த இரண்டு நூலினர்த்தங்களும் தீவிரதரமுள்ள புத்திமான்களுக்கே ஒழிய மற்றவர்க்குத் தெரியாவென்று கண்டியாவரு மெளிதாக வறியத்தக்கதாக

அந்தவிரண்டு வழிநூலினர்க்குமு முன்னூலாகிய சிவாகமத்தினர்க் குமுந் தம்மிடத்தில் விளைவதாயிருக்கப்பட்ட திருவருள் ஞான முங்கூட்டிப் பொதுமைப்படச் செய்யுளாகவும் உண்மை யுரைப்பது செய்யுளாகவும் ஆகத் திருவிருத்த நூறுகக்கொண்டு சிவப்பிரகாச மென்னுந் திருநாமத்தினையுஞ் சாற்றிச் சார்பு நூலாகச்செய்தா ரெனவறிக.

என்றிங்ஙனஞ் சிவாகம முன்னூலென்பதற்குஞ் சிவஞான போதமுஞ் சிவஞான சித்தியும் வழிநூலென்பதற்கு மிந்தச் சிவப் பிரகாசம் சார்பு நூலென்பதற்கும் பிரமாணமாவது :—

'வினையினீங்கி விளங்கிய வறிவின் முனைவன் கண்டது முதனூலாகும்.'

'முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப் பின்னோன் வேண்டும் விகற்பங்கூறி யழியாமரபினது வழிநூலாகும்.'

"தன் கோளிறீஇப் பிறர்கோள் மறுப்பினெதிர் நூலென்ப ருரு சாரோரே" என்னும் இலக்கண விதியைப்பற்றி,

"வினையினீங்கி விளங்கியவறிவின் முனைவன் கண்டது முதனூ லாகும்" என்னும் விதியால் சிவாகம முன்னூலானதெனவறிக. இரண்டாவது, "முன்னோர் நூலின் முடிபொருங்கொத்துப் பின் னோன்வேண்டும் விகற்பங்கூறி யழியாமரபினது வழிநூலாகும்" என்னும் விதியால் சிவஞான போதமும் சிவஞான சித்தியும் வழி நூலான வெனவறிக.

மூன்றாவது, "இருவர் நூற்கும் ஒருசிறை தொடங்கித் திரிபு வேறுடையது புடைநூலாகும்" என்னும் விதியால் முன்னூலாகிய சிவாகமத்தினர்க்குமும் வழிநூலாகிய சிவஞானபோதஞ் சிவஞான சித்தியினர்க்குமுங் கூட்டியருளிச் செய்கையாலிந்தச் சிவப்பிர காசம் சார்பு நூலானதெனவறிக.

என்றிங்ஙனஞ் சிவாகம முன்னூலென்பதற்குச் சிவஞானபோ தமுஞ் சிவஞானசித்தியும் வழிநூலென்பதற்குஞ் சிவப்பிரகாசப் புடைநூலாகிய சார்பு நூலென்பதற்கும் பிரமாணமேதென்னில்?

ஞானதீக்கைத் திருவிருத்தத்தில் "மேதகு மிகுபொருட் பயின்ற சிவப்பிரகாசத்திற்றிரிந்து பொதுச்சங்கற்ப நிராகரணத்திருத்தி,



யாசிலருள்விளை வெண்பாச்சார்பு நூலாலருளெளிதிற் கூடு வரித்தாரான், நூசை தக்க காரணமுன் புகன்றதனிற்புரிந்து புணர்விக்கச் சிவஞான போதசித்தி வழிநூன், மாசில் சதமணிக் கோவை முன்னூல் சான்று மருவுதிருமுறைத் திரட்டு வைத்தனன் மன்னுயிர்க்கே"—என்பது கண்டு கொள்க.

அன்றியுமிந்தச் சார்பு நூலாகிய சிவப்பிரகாசமென்னு நூலி லே முன்னூலினர்க்குமும் வழிநூலினர்க்குமும் அது நீங்கலாக வேற்றுமையர்த்தமுங்கூட்டி யருளிச்செய்ததற்குப் பிரமாணம் இந்நூலிலே, "தெரித்தகுரு முதல் வருயர்" என்ற செய்யுளிலே "இறைவனூலுங் கலந்து" என்றமையான் முன்னூலினர்க்குமுங் கூடினதெனவறிக.

"விளம்பிய நூலைவயிரண்டும் விரும்பிநோக்கி" என்றமை யால் வழிநூலினர்க்குமுங்கூடினதெனவறிக.

"கருத்திதுறை திருவருளும்" என்றமையால் திரிபு வேறு டைய வேற்றுமையர்த்தமுங்கூடினதெனவறிக.

ஆக மூன்று வகையுமிங்ஙனங் கண்டு கொள்க.

இந்தச் சிவப்பிரகாசமாகிய நூலிற் செய்யுள் நூற்றுக்குங் கருத்தேதென்னில் :—

பாயிர மீராறு பதியாறு பல்லுயிரோன்
றேயுந் திரோதமல மொன்றென்பர்—தூயபத
முத்திதரு மாயை யொன்றாகு மூவுலகிற்
புத்திதரு மாயைப் புணர்ப்பாறு—பெத்தம்விட
லொன்று நீதாகும்வினை நாலாகு நாடோறுந்
தூன்று மலத்தின் பெருகை யொன்று—பொன்றவருந்
தேவ லமைந்து கிளந்தி லுயிருக்குப்
பாவுணர்த்தும் வைகரியின் பாவிரண்டு—தேவர்களுங்
கூடுஞ் சகல நாலேந்தாகுங் கூடுமலம்
வீடுகின்ற சுத்த வியப்பொன்று—நீடுமின்ப
முத்தி யொன்றாக மதித்தருளால் முன்னோர்கள்
பத்தியாற் சொன்ன பரிசினால்—இத்தலமே
லுண்மை யுரைத்தி லுயிருண்மை யொன்பதா
நண்ணவத்தை மூன்று நலமாக—வெண்ணரிய
தன்னை யுணர்த்துந் தகையைந்து தன்னுணர்த்து

மன்றுணர் வின்ஞான வகைமூன்று—பின்றுயிரை
மாசறவே காணும் வகையைந்து மற்றதனி
லாசொழிக்குந் தன்மையது நான்கு—தேசனுருப்
பார்வையறப் பார்க்கும் வகை பத்தாம் பஞ்சாக்கரத்தைத்
தேரும் வகை மூன்று தெரியுங்கால்—சீர்மருவு
மன்பாற் சிவனை யனுபவிக்கு மெய்யடியா
ரின்பப் பகுதி யிருமூன்று—துன்பமறச்
சொற்றருநூலின் கருத்தொன்று சொற்றருநூ
னற்ற வருக்கீயு நலமொன்று—முற்றவரும்
பந்த மறுத்த சகநாதன் பார்வை யென
வந்தளித்த சம்பந்த மாமுனிவன்—அந்தைபதஞ்
சென்னியின்மேல் வைத்துச் சிவப்பிரகாசக் கருத்தை
யன்ன வயற்காவை யம்பலவ—னன்னயத்தாற்
சொன்னு னெழுபிறப்புந் தொல்லை வினையுந்தீர
மன்னுகமத்தை மறித்து.

என்பது கண்டு கொள்க.

அன்றியு மிந்நூலுக்குத் திருவடிவரைவு மதிகாரமு மொக்கு வரும் வகையாவது :—

ஓங்குபரந்த நலம்வளந் தேவர் பா
ரீங்கிவை யாதுமிறைவன் வணக்கம்.
புறச்சமயத் தவர் நூற்கருத்தாகு
மூவகை விரும்பிய கிரியை யெனமூன்று
மாவது தீக்கா முறைமை யதாகும்.
தெரிந்த தொன்மை யெனவிவ் விரண்டும்
விரித்த நான்மா பவை யடக்கம்மே.
பலகலை நீடிங் குலகங் கந்த
மேற்ற விவ்வாறு மிறைவ னிலக்கண
மெண்ணரி தொன்றும் பசுவி னிலக்கணம்.
ஏகமா யொன்று மலமுந் திரோதமு
முன்ன லொன்றுங் குடிலையி னியல்பா
முருவாதி யென்னை படைத்த வல்ல
லருத்தி மன்னிய வாறும சுத்தத்
திருத்தகு மாயையின் செய்திய தாகும்.
நண்ணிய கன்மமே லையுற்ற வென்
றெண்ணிய நான்குங் கன்மத் தியல்பே.
மோக மிகவென் றெண்ணிய வொன்றும்



வேக மிகுமல மைந்தின் விதியே.
யோங் கின்மை மாயை யந்நியம் புகலு
மீங்கிவை யைந்துங் கேவலத் தியல்பே.
வந்தடைந் தித்தகை பேசரியை வகை
யந்தமில லகில் குணமான தனுவுடன்
சொன்ன முந்தி யின்னிலை தோற்றி
யன்ன பத்துஞ் சகல வவத்தையே.
யினையநாடி யெனவிவ் விரண்டு
முனைவன் சுத்த முறைமை யதாகும்.
என்னும் பொதுவியல் விருத்த மைம்பதிம்
மன்னிய கருத்தை வகுத்தன னிப்பா
லிங்கிவை யொன்று முண்மையிற் பாயிரம்.
செறிந்திடு முருவுண ரறிவெனில் வாயி
லறிவினு லெவ்வறி வசத்தறிந் ததுவுஞ்
சத்தினு கண்ணொளி யோரிடத் தெட்டு
மித்திர மான்ம விலக்கண மாகும்.
எண்ண விவ்வகை நீக்கமின் மூன்று
மண்ணலளித்த வவத்தைய தாகும்.
மருவிய தனக்கெனக் கண்டறி புலன்க
ளிருணநி யறிந்திடு மிவையோ ரைந்தும்
பொருவிலான் மாவை யுணர்த்தல் புகலும்.
காட்டிடும் பன்னிற மாயை யிம்மூன்று
மூட்டுஞான வாய்மையை யுரைக்கும்.
தேசுறமும்மையின் பாரிப்பதாகும்.
தன்னறிதத்துவ முறைதருசுத்த
மின்னவைநான்கு மன்னுயிர்த்தரிசனம்.
புகலருமின்றுநோக் கிந்நிலையடைபவ
ரிகலறுநான்கு மிலங்குயிர்ச்சுத்தி.
பொற்புறு மொடுங்கிடா பற்றிடுமுந்திய
சொற்பெறுபாசம் விளம்பிய பாவிக்கி
லொன்றிரண்டாகி யழிந்திடு மெல்லை
யென்றிவை பத்து மிலங்குயிரிலாபம்.
பந்தந்திரு வெழுத்தைந் திலாசுறு
மந்தமின்மூன்று மைந்தெழுத்தருணிலை.
தீங்குறு குறிப்பக மண்டமண் தொண்டரென்
ருங்கிவையாறு மணைந்தோர் தன்மை.
நிலவுலகொன்று நூற்கருத்தாகும்.

திருவருளொன்று மருளுறைநூலைக்
கொடுக்குமுறைமைப் பகுதியதாகுமென்
றிப்படியுமாபதி தேவருரைத்த
மெய்ப்பதி சிவப்பிரகாசவிருத்தக்
கருத்தினதுண்மை விரித்துரைத் தருளினன்
சண்பையில்வாழுந் தவகுருநாதன்
பண்பமர் சிற்றம்பலவன் றானே

என்பது கண்டு கொள்க.

என்றிங்ஙனங் கூறிவந்த வகையில் முன்னுள்ள சிவஞான போதத்தினர்த்தமுஞ் சிவஞானசித்தி யினர்த்தமுமிந்தச் சிவப்பிரகாசவழி நூலினர்த்தமுங்கூடினதே. ஆனாலந்நூல்களைப்போலச் சூத்திரம் பன்னிரண்டு மிந்நூலினின்ற முறைமை யெங்ஙனேயென்னில்? அவை வருமாறு ஒங்கொளியாயென்ற விருத்தந்தொடங்கி தொன்மையவாமென்னும் விருத்தமுடிவாகிய செய்யுட்கள் பன்னிரண்டும் பாயிரமாக வகுத்தருளிச்செய்து,

மேற்பதி யிலக்கணமாகிய "பலகலை" யென்ற விருத்தந் தொடங்கி எற்றவையென்ற விருத்த முடிவாகிய செய்யுட்களாறு முதற்சூத்திரமாகவும்.

பசுவிலக்கணமாகிய "எண்ணரிதா" யென்ற விருத்தந்தொடங்கி அரிவையரின் புறமுத்தியென்ற விருத்த முடிவாகிய செய்யுட்கள் முப்பத்திரண்டு மிரண்டாஞ் சூத்திரமாகவும்,

ஆகப்பொது வைம்பது மிங்ஙனம் வகுத்து,

மேலுண்மை யைம்பதில், இங்கிவையென்ற விருத்தமொன்றும் இந்த உண்மைக்கு அதிகார வகுப்பாகவும்,

மேல் ஆன்ம விலக்கணமாகிய செறிந்திடுமென்ற விருத்தந் தொடங்கி ஒரிடத்திருத்தலென்ற விருத்த முடிவாகிய செய்யுட்களெட்டு மூன்றாஞ் சூத்திரமாகவும்,

அவத்தைத் தன்மையாகிய எண்ணலொன்றில்லாததீதம் இவ்வகையவத்தை நீக்கமிலதீதம் ஆகச்செய்யுட்கள் மூன்று நாலாஞ் சூத்திரமாகவும்,

உணர்த்து முறைமையாகிய மருவிய பொறியிலென்ற விருத்தந்தொடங்கி யறிந்திடுமனுதியென்ற விருத்த முடிவாகிய செய்யுட்களொன்றும் ஐந்தாஞ் சூத்திரமாகவும்,



ஞானவாய்மையாகிய காட்டிடுங்காணம் பன்னிறங்கவரு மாயை மாமாயை யென்னும் விருத்த மூன்றினுள் காட்டிடுங்காண மொன்றும் ஆறாஞ்சூத்திரமாகவும்,

நின்ற விருத்தமிரண்டு மேலதற்கோர் புறனடையாகிய வேழாஞ்சூத்திரமாகவும்,

மேலதன்பயனென்னு மதிகாரத்தினுள் தேசுறமருவுமென்ற விருத்தந்தொடங்கி எல்லையில் பிறவியென்னும் விருத்தமுடிவாகிய செய்யுட்கள் பத்தொன்பதும் புனிதனுமமென்னும் அதிகாரமாகிய டந்தபானவை திருவெழுத்து ஆசுறுவென்னும் விருத்தமூன்றும் ஆகமுன்னுங்கூட்டிச் செய்யுட்கள் இருபத்திரண்டினுள் தேசுற மருவுமென்ற விருத்தமொன்றும் இவையிற்றுக்கு அதிகாரவகுப்பாகவும்,

ஆன்ம தரிசனமாகிய தன்னறிவதனுலென்ற விருத்தந்தொடங்கிச் சுத்தமாஞ்சத்தியென்ற விருத்த முடிவாகச்செய்யுள் நான்கும் எட்டாஞ் சூத்திரமாகவும்,

ஆன்ம சுத்தியாகிய புகலருபசத்தர் தம்பாலென்ற விருத்தந் தொடங்கி அடைபவர் சிவமேயாகுமென்ற விருத்த முடிவாகிய செய்யுட்கள் நான்கும் பஞ்சாக்கா தரிசனத்தில் விருத்த மூன்றும் ஆக மூன்றுக்கூடிச் செய்யுட்களேழும் ஒன்பதாஞ் சூத்திரமாகவும்,

ஆன்ம லாபமாகிய பொற்புறு கவியென்ற விருத்தந்தொடங்கி எல்லையில் பிறவியென்ற விருத்த முடிவாகிய செய்யுட்கள் பத்தும் பத்தாஞ்சூத்திரமாகவும்,

தொண்டர்களிடமென்ற விருத்தமொன்றும் பன்னிரண்டாஞ் சூத்திரமாகவும் நின்ற வெனவறிக.

இங்ஙனம் சூத்திரம் பன்னிரண்டும் வகுத்து நிலவுல காயதாதியென்னும் விருத்தமொன்றும் இந்நூலின் கருத்தாகவும்,

திருவருள்கொடுத்து என்னும் விருத்தமொன்றும் சீடனுக்கு நூலுமர்த்தமும் கொடுக்கு முறையாகவும், வகுத்து இந்நூல் அருளிச்செய்ததெனவறிக.

ஆதலிங்ஙனஞ் சூத்திரங்கள் வகுத்ததற்கு மேலெழுதுகிற வியாக்கியிலேயந்தந்தவதிகாரங் கடோறுஞ் சிவஞானபோதத்திலும் சிவஞானசித்தியிலும் வருஞ் சூத்திரத்தி னேதுக்களுங்காட்டி எழுதுகிற முறைமையிலே சூத்திரம் பன்னிரண்டும் கண்டு கொள்க.

இந்த வியாக்கியானம் செய்தது மெய்கண்ட சந்ததியில் காவை அம்பலநாதத் தம்பிரானுர் திருவடிமரபில் ஆசாரியரில் மதுரையில் ஞானப்பிரகாசத் தம்பிரானுர் திருவடியடியரில் சிவப்பிரகாசன்செய்த வியாக்கியானமெனவறிக.

இந்தச் சிவப்பிரகாசமாகிய நூலுக்கு முன்னோர்களும் வியாக்கிசெய்திருக்க இப்பொழுது இந்த வியாக்கிசெய்யவேண்டுங் காரணமேதென்னில்? முன்னுள்ள தம்பிரான்களெழுதின வியாக்கிகளெல்லாம் பொழிப்புரையாக வெழுத அதனோடு சமயிகள் கருத்து களுங்காட்டி யென்றம்பிரான் ஞானப்பிரகாசத் தம்பிரானுரெழுதின வியாக்கியின் வழியே தொந்தனையும் பாட்டுஞ்சேர்த்து அது நீங்கலாகக் காவையம்பல நாதத்தம்பிரானுர் இந்நூலின் கருத்தாகச்செய்தருளின குறள் வெண்பா நூறும் இந்நூலிற்பாட்டு கடோறும்பகுத்துச் சேர்த்து அந்தக் குறளின் கருத்தாகிய அர்த்தங்களுக்கும் தவறு வராமல் முன்னுண்டான வியாக்கிகளின் பொழிப்போடும் விரிவோடும் நுட்பமும் அகலமுங்காட்டி வழிநூல்களுண்டான சூத்திரம் பன்னிரண்டும் இந்நூலிலே வகுத்து வியாக்கிசெய்ததெனவறிக.

இங்ஙனம் பலவகையாக வியாக்கியெழுது கைக்குவிதியே தென்னில்? அஃதாவது.

"பொழிப்பகல நுட்ப நூலெச்ச மிந்நான்கிற்
கொழித்தகலங் காட்டாதார் சொற்கள்—பழிப்பி
னிரையாமா சேர்க்கு நெடுங்குன்ற நாட
வுரையாமோ நூலிற்கு நன்கு."

என்றமையான்.

நூல்களுக்கு நால் வகைப்பொருளுங்கூட்டி வியாக்கிசெய்யும் விதியுண்டாகையால் அவ்விதியைப்பற்றிப் பொழிப்பும் அகலமும் நுட்பமும் நூலெச்சமுங்காட்டி வியாக்கியெழுதின தெனவறிக.

அஃதாவது

"பொழிப்பெனப் படுவது பொருந்திய பொருளைப் பிண்டமாகக் கொண்டுரைப்பதுவே" எ - ம்.

"அகலமென்ப தாசறக்கிளக்கின் விகலமின்றி விரித்துரைப்பதுவே."

"நுட்பமென்பது நுழைபொருளியாவுந் திட்பமாகத் தெளியக்கூறல்."

"எச்சமென்ப திருபொருளொழிவு மிச்சமாக விரித்துரைப்பதுவே" எ - ம், வருமிலக்கண விதியைப்பற்றி யெனவறிக.

இதிற்பொழிப்பானது சத்தத்துக்கு அர்த்தமாகத் தொகுத்து எழுதுகை எனவறிக.

அகலமாவது அதனை விரித்தெழுது கையெனவறிக.

நுட்பமாவது கடாவுக்கு விடைகொடுத்து எழுதுகை யெனவறிக.



எச்சமாவது பாட்டிற்புகுதாத பொருள்களை யமைத்தெழுதுகை யெனவறிக.

மேற்பாயிரம் வருமாறு.

இங்ஙனமிந்த நூல்களுக்கு முந்தப்பாயிரங் கூறுகைக்கு விதியேதென்னில், "ஆயிரமுகத்தான கன்றதாயினும் பாயிரமில்லது பனுவலன்றே" என்னும் விதியைப்பற்றி முந்தப்பாயிரமருளிச் செய்யவேண்டி இந்நூலுக்குக் காப்பொரு செய்யுளாகவும் பாயிரம் பன்னிரண்டு செய்யுளாகவும் அருளிச்செய்வானெடுத்துக் கொண்டருளியது.

ஒளியான திருமேனி யுமிழ்தான மிகமேவு
களியார வருமானை கழனாளு மறவாமல்
அளியாரு மலர்தூவு மடியார்களுளமான
வெளியாகும் வலிதாய வினைகூட நினையாவே.

ஒளியிது காப்பருட் கணபதி கழலினை
தெளிபவருமை வினைசேரா வென்றது.

(இதன்பொருள்.) ஒளியான திருமேனி=ஞானப்பிரகாசமான திருமேனியிலே, உமிழ்தான மிகமேவு களியார வருமானை=பொழியாநின்ற மதத்தினை மிகவும் பொருந்தப்பட்டுக் கர்வ மிகுதியாலே எழுந்தருளாநின்ற யானைமுகத்தினையுடைய மூத்தநாயனுர், கழல்நாளும் மறவாமல்=அவரது ஸ்ரீ பாதத்தை நாடோறு மறவாமல், அளியாரும் அலர்தூவும் அடியார்கள்=வண்டுகளை ஆட்சியாகவுடைய பூக்களினுலே யர்ச்சித்து வழிபடுகிற தொண்டராயுள்ளவர்கள், உளமான வெளியாகும்=உள்ளமானது அஞ்ஞானமாகிய விருணீங்கி சிவஞானம் பிரகாசியாநிற்கும் ஆகையாலே, வலிதாய வினைகூட நினையாவே=அவர்களை மிக்க வினைகளானதும் பொருந்த விசாரியாது.

எனவே இந்நூல் காப்பது நிமித்தமாக வழிபடா நின்றே மென்பது கருத்து.

நுட்பம்—ஞானமென்றது அறிவெனவறிக.

தானமென்றது மதமெனவறிக.

அடியார்களென்றது தங்கள் சுதந்தர ஹானியை யறிந்து வழிபடுந் தொண்டர்களெனவறிக.

சுதந்தர ஹானியாவது யானெனது கெடநிற்கை யெனவறிக.

வலிதாய வினையென்றது பிராரத்தம் புசிக்கச் சேயேறுகிற ஆகாமிய கன்மமெனவறிக.

இதற்குப் பிரமாணம் திருவருட்பயனில், 'என்றவினை யுடலோடேகு மிடையேறு வினை, தோன்றிலருளே சுடும்' எ - து. கண்டுகொள்க.

இதன்கருத்து:—இந்நூலுக்குக் காப்பெனவறிக. (தொடரும்.)

# மதிப்புரை

**1. கந்தரலங்கார வுரை.**

"கேட்டதெலாம் பாலிக்கும் கேடிலாத்தாதாவும் வீட்டு நெறி காட்டும் வியன் குருவு" மாகிய சிவகுகப் பெருமானின் வரப்பிரசாதம் பெற்று விளங்கினவருள் அருணகிரிநாதர் தலைசிறந்தவர் என்பது எவருமொப்புக்கொண்ட விஷயமாகும். இதனை, "கந்தரநுபூதிபெற்றுக் கந்தரநுபூதிசொன்ன, எந்தையருள்நாடி யிருக்கு நாளெந்நாளோ" என்னும் தாயுமானவர் திருவாக்கு வலியுறுத்தும். இப்பெரியார் இயற்றியருளிய நூல்கள் கந்தரநுபூதி, கந்தரலங்காரம், திருவகுப்பு, திருப்புகழ் முதலியன. இவைகளெல்லாம் பக்திச்சுவை பயப்பன; பாராயணத்திற்குரியன. இவற்றுள் கந்தரலங்காரமானது 100 திருவிருத்தங்களால் ஆக்கப்பட்டதோர் இனிய நூல். இதற்குக் கொழும்புநகர் வித்யா துரந்தராய ஸ்ரீமான் திருவிளங்கம் அவர்கள் புத்துரையொன்று எழுதி வெளியிட்டிருக்கின்றனர். இதுகாறும் வெளிவந்துள்ள உரைகளைவிட இது சாலச்சிறந்ததாகவே காணப்படுகின்றது. மேலும் இவ்வுரையானது ஆசிரியரின் சித்தாந்த நூற்பயிற்சியை நன்கு புலப்படுத்தா நிற்கின்றது. இவர்கள் கந்தரநுபூதிக்கும் திருவகுப்பிற்கும் இத்தகைய உரையொன்று எழுதி உபகரிப்பார்களாயின் பெரும்புண்ணியமாகும். இதன் விலை அணா 7 பிரதிகள் சமாஜ ஆபீசிற் கிடைக்கும்.

**2. ஜார்ஜ் மன்னர் பெருமான் இயன்மொழி வாழ்த்து.**

நமது மகிபாலராகிய ஜார்ஜ் மன்னர் பெருமானது 55-வது ஆண்டு நிறை விழாவின் பெருஞ்சிறப்பினை அகவற்பாவால் விதந்து கூறுவது இச்சிறு நூல். புறநானூறு முதலிய சங்க நூல்களில் விளங்கும் அரசவாழ்த்துக்களைப்போல இது யாக்கப்பட்டுள்ளது. "அனைவோர்க்கும் தெய்வம் இலைமுகப் பைம்பூணிறை" என்பது இந்துமத சித்தாந்தமாதலால் ஒவ்வொருவரும் இதனை வாங்கி வாசித்தல் பெருங்கடனாம். கல்லூரிமாணவர்க்கென்றே இது தெள்ளிய நடையில் இயற்றப்பட்டிருப்பதால், அவர்கள் இதனை அவசியம் வாசிக்கவேண்டியதே. இதனை இயற்றினோர், கொழும்புநகர் ஆசிரியர் கல்லூரித் தமிழ்ப்பண்டிதராக விளங்கும் ம-ள-ள-ஸ்ரீ ச. கந்தையபிள்ளை அவர்களாகும். இவர்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களது ஆசிரியர் வழித்தோன்றினவர்கள். இதனால் இவர்கள் தமிழ்ப்புலமை சொல்லாமலே விளங்கும்.

இதன் விலை அணா 2. மாணவர்களுக்கு அணா 1. பிரதிகள் சமாஜ ஆபீசிற் கிடைக்கும்.

**3. தமிழ் வரலாறு.**

அமிழ்தினுமினிய தமிழைப்பற்றி இதுகாறும் வெளிவந்துள்ள நூல்களில் அமைந்துள்ள கருத்துக்களையெல்லாம் தொகுத்து விளக்குவது.



இது மாணவர்க்கேயன்றி ஏனையோருக்கும் வேண்டற்பாலதேயாகும். இதன் ஆசிரியர் "விநாயக மான்மியம்" "முப்பொருளாராய்ச்சி" முதலிய அரிய நூல்களியற்றிய மட்டு நகர் வித்துவான் ஸ்ரீமான் ச. பூபாலபிள்ளை அவர்களாவார். இதன் விலை ரூ. 2 0 0 பிரதிகள் ஆசிரியரிடம் எழுதிப் பெறற்பாலன.

**4. திருத்தொண்டர் வெண்பா.**

இது, அறுபான் மும்மை நாயன்மார்கள் சரித்திரத்தையும், தொகையடியார் ஒன்பதின்மர் சரித்திரத்தையும் திருக்குறள் உத்தரார்த்தத்துடன் நன்கு விளக்குவது. சிவ சிவ வெண்பா, சோமேசர் முதுமொழி வெண்பா முதலிய நூல்களைப்போன்றது. இதனை இயற்றிய பெரியார் இன்னாரென்று [illegible]யவில்லை. செய்யுள் நடை கருத்து முதலியன நோக்குமிடத்து கல்வி [illegible]விகளில் சிறந்த புலவராலேயே இயற்றப்பட்டிருக்கவேண்டுமென்று ஊகிக்க இடந்தருகின்றது. இவ்வருமையான நூலை அச்சிட்டு உபகரித்தவர் புழல் ஸ்ரீமான் திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் இதன் விலை அணா 1 பிரதிகள் சமாஜ ஆபீசிற் பெறற்பாலன.

## அநுதாப அறிவிப்பு

இச்சமாஜ ஸ்தாபகருள் ஒருவரும் உப அக்கிராசனருள் ஒருவருமாய் விளங்கிய ஸ்ரீமான் J. M. நல்லசாமிப்பிள்ளை அவர்கள் சென்ற ஆகஸ்டு மீ 11ௌ புதன்கிழமை பகல் 3-மணிக்குச் சிவபதம் அடைந்தமைக்கு யாம்பெரிதும் துக்கப்படுகிறோம். இவர்கள் கீர்த்தி இத்தென்னாட்டிலேயன்றி வட இந்தியா, இலங்கைமுதலிய பிறதேசங்களிலும் பரந்து விளங்கிற்று. இவர்கள் முப்பது வருஷகாலமாகச் சைவசமயத்துக்குப் புரிந்துவந்த உதவிகள் பல. சிவஞானபோதம், சித்தியார், திருவருட்பயன் முதலிய சித்தாந்த சாத்திரங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சித்தாந்தக்கொள்கை இன்னதென்று இங்கிலாந்து, அமெரிக்காமுதலிய அன்னிய தேசங்களிலுங்கூட பரவும்படி செய்தனர். சித்தாந்த தீபிகை என்னும் ஆங்கில பத்திரிகை வாயிலாகவும், மெய்கண்டான் அச்சுக்கூட வாயிலாகவும் பல நூல்களை வெளிப்படுத்திச் சைவசமயத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் பேருதவிபுரிந்து வந்தனர். இவர்கள் மெய்கண்ட சாத்திரம் 14 யும், நீலகண்டபாடியும் பெரியபுராணம்முதலியவற்றையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வைத்திருப்பதாக அறிகிறோம். இவர்கள் கூரிய மதிநுட்ப முடையவர். இவர்களுக்கு இணையாகச் சித்தாந்த சாத்திரத்தை ஆங்கிலத்தில் விளக்கக்கூடியவர் ஒருவருமில்லையென்னலாம். இவர்கள் தம் வாழ்நாளில் அநேக வித்துவான்களையும் ஆதரித்துவந்ததாக அறிகிறோம்.

இப்பெருந்தகையாரது பெயர் என்றும் நிலவும்படி இவர்கள் படமொன்றைச் சமாஜ உத்தியோகசாலையில் அமைக்கவேண்டுமென்பது பலருடைய கருத்து. இதுமுற்றுப் பெறுவது சைவாபிமானிகளது பேருதவியினாலேயாம்.

## சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 1920ஞ பிப்ரவரி—ஜூலைமீ வரவு செலவு கணக்கு.

18715

| வரவு. | தொகை. ரூ. | அ. | ப. | செலவு. | தொகை. ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| 1920ஞ ஜனவரிமீ 31உ இருப்பு | 2 | 10 | 11 | விகிதர் சம்பளம் | 90 | 0 | 0 |
| சமாசிகர் வருட சந்தா ... | 347 | 15 | 0 | அச்சுக்கூலி | 101 | 4 | 0 |
| ஆயுள் சமாசிகர் சந்தா ... | 25 | 0 | 0 | காகிதம் ... | 27 | 9 | 0 |
| புத்தக விற்பனை ... | 13 | 9 | 6 | தபால் செலவு முதலியன ... | 51 | 15 | 0 |
| நன்கொடை ... | 10 | 0 | 0 | | 270 | 12 | 0 |
| வட்டி ... | 1 | 8 | 3 | ஜூலைமீ 31உ இருப்பு ... | 139 | 15 | 8 |
| விளம்பர விகிதம் ... | 10 | 0 | 0 | ஆயுள் சமாசிகர் சந்தா ரூபா 645 0 0 | | | |
| மொத்தம் | 410 | 11 | 8 | ஆகமொத்தம் ... | 410 | 11 | 8 |

K. Subrahmaniam, *Secretary.* C. V. Jambulingam, *Treasurer.* M. Masilamani Mudaliar, *Auditor.*



## "செந்தமிழ்க் களஞ்சியம்."

## (THE TREASURY OF TAMIL CLASSICS.)

இதில் இப்போது ஸ்ரீ மாணிக்கவாசகசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருவாசகவிரிவுரை வெளிவருகின்றது.

இக்காலத்தவர்க்குப் பயன் படும்படி நூல்களும், உரைகளும் எழுதுமிடத்தும் முன்னோர் நூலின் வரம்பு அழியாமலும் இக்காலத்திற்கும் இசைந்து பயன்படும்படியாகவும் எழுதும் ஆற்றலுடைய பல்லாவரம், சமரச சன்மார்க்க நிலையகுரு, ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்களால் திருவாசகம் என்னும் அரும்பெருநூலுக்கு விரிவாகவும், விளக்கமாகவும் தெளிவான இனிய செந்தமிழ் நடையில் உரை எழுதப்பட்டு வெளிவருகின்றது.

இத்திருவாசக வுரையின் கண் இடை யிடையே ஸ்ரீ பஞ்சாட்சர இரகசியங்களும், திருநீற்றின் உண்மையும், முழுமுதற் கடவுளியல்பும், ஆணவம் மாயை கன்மம் என்னும் பாசங்களின் இயல்பும், அன்பின் நிலையும் ஆன்ம இலக்கணமும், பேரின்ப நிலையும், தத்துவ இரகசியங்களும், உரைமுடிந்த பின் மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திர நுணுக்கமும், அவர்கள் இருந்த கால நிர்ணயமும், புத்தமதக் கோட்பாடுகளுஞ் திருவாசக நுண்பொருள் ஆராய்ச்சியும் உரையைத் தொடர்ந்து வெளிவரும்.

வருடம் ஒன்றுக்கு 12 பகுதிகளாக (ஒருபகுதி டெம்மி 32 பக்கங்கள் அடங்கிய அளவுள்ளது) வெளிவருகின்றது. ஐந்து பகுதிகள் வெளிவந்து விட்டன.

இந்தியா, இலங்கை பர்மாமுதலிய இடங்களிலுள்ளவர்கட்கு வருடக் கையொப்பம் ரூ. 4. வி. பி. யில் அனுப்பமுடியாத வெளி நாட்டிலுள்ளவர்கள் வருடக் கையொப்பம் ரூ. 6 ஆறையும் முன் பணமாக அனுப்பவேண்டும். கையொப்ப நண்பர்கட்கு முதற் பகுதியை ரூ. 4—8 அணுவுக்கு வி. பி. யில் அனுப்பப்படும்.

மாதிரிப் பிரதி 6 அணு; படத்துடன் 8 அணு.

திருசங்கர் கம்பெனி,
பவழக்காரத் தெரு,
சென்னை.

# சமாஜ ஆபீசில் விற்கப் பெறும் புத்தகங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| Essentials of Hinduism | ... | 3 | 0 | 0 |
| சிவப்பிரகாசப் புத்துரை | ... | 1 | 12 | 0 |
| பிரபஞ்ச விசாரம் | ... | 1 | 8 | 0 |
| திருப்புகழ்த்திரட்டு விரிவான அரும்பதவுரையுடன் | | 1 | 6 | 0 |
| விநாயக மான்மியம் | ... | 1 | 0 | 0 |
| மெய்கண்ட சாத்திர மூலம் | ... | 1 | 0 | 0 |
| திருவருட்பயன் விளக்கவுரை | ... | 0 | 9 | 0 |
| சைவ சித்தாந்தச் சுருக்கம் | ... | 0 | 7 | 0 |
| சைவபோதகம் | ... | 0 | 6 | 0 |
| மகாவுக்கிர வீரபத்திராஸ்திரம் | ... | 0 | 4 | 0 |
| ஆத்திசூடி முதற் சூத்திர விருத்தி | ... | 0 | 4 | 0 |
| மஞ்சிகன் நிகண்டு | ... | 0 | 2 | 0 |
| சிவஞானபோத உபந்நியாச பாடம் | ... | 0 | 10 | 0 |
| நாவலர் சரித்திரம் படத்துடன் | ... | 0 | 8 | 0 |
| சிவராத்திரி மான்மியம் | ... | 0 | 4 | 0 |
| கந்தாலங்கார தத்துவார்த்தவுரை | ... | 0 | 7 | 0 |
| ஜார்ஜ்மன்னர் இயன்மொழி வாழ்த்து | ... | 0 | 2 | 0 |
| சித்தாந்தம் தொகுதி 3 முதல் 8 வரை ஒவ்வொருதொகுதி | ... | 1 | 4 | 0 |
| திருத்தொண்டர் வெண்பா (திருக்குறளுக்காதாரத்துடன்) | ... | 0 | 1 | 0 |